*Registered as a Newspaper.*

9.162

# வித்தியா சமாச்சாரப் பத்திரிகை.

# THE EDUCATION GAZETTE

தொகுதி க. 1933-ம் ௵ நொவம்பர்-௴. பகுதி ௬.

## உள்ளுறை.


1. ஆசிரியரும் கல்விப்பயிற்சியும்.
2. பாடசாலைகளில் இலக்கணங் கற்பித்தல்.
3. வஞ்சிப்பூ மாலை.
4. நாட்டுச்சிவன சாத்திரம்.
5. அரசாங்க வைத்திய சுகாதாரப் பகுதிவெளியீடு.
6. பாலரைப் பயிற்றல்.
7. வித்தியாபகுதிச் சுற்றுநிருபங்கள்.
8. சினிமா படக்காட்சி
9. அரசினர் தமிழ்ப்பாடசாலைகளில் ஆசிரியரின் நியமனமும் மாற்றமும்.
10. அரசினர் தமிழ்ப்பாடசாலைகளில் காலியான இடங்கள்.


Printed and Published for the Education Department at St. Gerard's Press,
10, Maliban Street, Pettah, Colombo.

# அறிவித்தல்

1. ஆசிரியரது தேர்ச்சிக்குரிய விடயங்கள் இப்பத்திரிகையில் வெளியிடப்படும்.

2. இப்பத்திரிகைக்கு விடயம் எழுதுவோர் காகிதத்தின் ஒரு பக்கத்தில் மாத்திரம் நல்ல எழுத்தில் எழுதி அனுப்ப வேண்டியது.

3. சாதி சமயவாதங்கள், அரசினரின் ஆட்சி முறைகளைப் பற்றிய கண்டனங்கள் முதலியன இப்பத்திரிகையில் இடம்பெறா

4. விடயங்களை வெளியிடவும் வெளியிடாதொழியவும் வேண்டும் பாகங்களைத் திருத்தவும் பத்திராசிரியருக் குரிமை யுண்டு.

5. மதிப்புரைக்குரிய நூல்கள், பத்திரிகைகள் முதலியன வித்தியா சமாசார தமிழ்ப் பத்திரிகைப் பத்திராசிரியர், வித்தியா கந்தோர், கொழும்பு என்ற விலாசத்திற்கே அனுப்புதல் வேண்டும்.

6. ஆண்டுக்கையொப்பத்தை கொழும்பு, மலிபான் வீதியிலுள்ள செயின்ற் ஜெருட் பிறெஸ் மானேஜருக்கனுப்புக.

# வித்தியா சமாச்சாரப் பத்திரிகை

" கற்க கசடறக் கற்பவை ; கற்றபி னிற்க வதற்குத் தக "

| தொகுதி ௧. | 1933-ம் ௵ நொவம்பர்-௴ | பகுதி ௩. |
|---|---|---|


## EDITORIAL NOTES.

### Teachers and Teaching Practice.

### ஆசிரியரும் கல்விப்பயிற்சியும்.

" கண்ணுடையர் என்போர் கற்றோர் முகத்து இரண்டு புண்ணுடையர் கல்லாதவர் "

என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவர், நம்மவர்க்கு எடுத்துக்காட்டிய உண்மைக்கருத்தை ஆழ்ந்து சிந்தித்தல் வேண்டும். உயிரினங்கட்கு ஐம்பொறிகளுள்ளும் கண்ணே சிறந்தது. இயற்கையிற் காணப்படும் வனப்புக்கள் பல. கண்ணில்லாதானுக்கு எவ்வகையான உணர்ச்சியையும் எழுப்பமாட்டாதனவாய்க் கழிகின்றன. உலகில் வானளாவித் தோன்றும் மலைகளிலும், ஆழ்ந்தகன்ற நீர்நிலைகளிலும் மற்றும் பலசிறப்பட்ட இயற்கைவனப்புக்களிலும் நாள்தோறுங் காணப்படும் எண்ணிலவாய அற்புதங்களை, புதுமைகளை, நவீன தோற்றங்களைக் கண்டுகளிகூருதல் கபோதிக்கில்லை. செறிந்த, திணிந்த அந்தகாரமானது அவனை விழுங்கியிருக்கின்றது. அஃதேபோல், கல்வி அறிவில்லாதவனும் பாரின்கண் நடைப்பிணமாய், விலங்குபோன்று, உற்சாகமின்றி, உயர்ந்த சிந்தனையின்றி, வீடுபெறும் நோக்கமின்றி அஞ்ஞான இருளின்கண் தட்டுண்டு தடுமாறி உழல்கின்றான்.

அஞ்ஞான மகற்றும் ஆசிரியர்பலர் தனித்தமிழ் கற்றுப் பின்பு, ஆசிரிய கழகம் நண்ணிப் பயிற்சி பெற்று பாலரைப் பயிற்றுமாறு பாடசாலைகளை விழைந்து நாடுகின்றனர். அவர் தம்கல்வி பாடசாலையுடன் முடிவு பெற்றுவிட்டதென எண்ணுகின்றனர். காலத்துக்குக்காலம் கல்விமுறைகள் மாறுவதைத் தங்கண்ணாரக் கண்டும் தம்பொழுதை அவமாக்குகின்றனர். "மேனோக்கா கீழ்நோக்கும், கீழ்நோக்கா மேனோக்கும்" என்பதைமறந்து போகின்றனர். தீந்தமிழையேனும் கசடறக்கற்று உயர்வடைய முறை ஆசிரியர் முயல்வாராக. (இவ்விதழிற் காணப்படும், தனித்தமிழ் தேர்வுகளையேனும் அவர்கள் உற்றுநோக்குவாராக) நிற்க,

"நாம் அறிந்த மொழிகளிலே, தமிழ் மொழிபோல் இனிதாவ தெங்குங் காணோம்" என்று நம்மை நாமேதேற்றிக் கொண்டுவாழா விருத்தலிற் பயனின்று. நம்பாஷை, தாய்ப்பாஷை, மிகவும் உயர்ந்தது; மேலானது; செவிக்கின்பம், மனக்கின்பம் பயப்பது. சுவைதொறும் சுவைதொறும், தெவிட்டா இனிமை கொடுப்பதென்பதுண்மையே. அதற்குமாறு கூறுவார் யாண்டுமிலர்.

நம் தாய் மொழியில் வேண்டிய நூல்கள் வேண்டியவாறே மலிந்து பொலிந்து விளங்குகின்றன என்று கூறுவார் கூறுக. ஆயின் ஆங்கிலபாஷை படைத்திருக்கின்ற நூற் செல்வம் தமிழ்ப் பாஷை படைக்கவில்லை யென்பது துணிபு. "தமிழ்நாட்டிலே சாஸ்திரங்களில்லை; உண்மையான சாஸ்திரங்களை வளர்க்காமல் இருப்பனவற்றையும் மறந்துவிட்டு.........வருகிறார்கள் தமிழர்" என்ற பாரதியார் அவர்களது திருவாக்கும் ஈண்டு நோக்கத் தக்கது. அன்றியும்,

"புத்தம்புதியகலைகள்—பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்தவளருது மேற்கே—அந்த
மேன்மைக்கலைகள் தமிழினில் இல்லை.
சொல்லவும் கூடுவதில்லை—அவை
சொல்லுந் திறமும் தமிழ்மொழிக்கில்லை.
.....................................அந்த
மேற்குமொழிகள் புவிமிசை ஓங்கும்."

என்று ஓலமிட்டுத் தன்னருந்தவப்புதல்வராயதமிழரை நோக்கி, "பிறநாட்டு நல்லறிஞர் சாஸ்திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும், இறவாத புகழுடைய புது நூல்கள் தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும், மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் பேசுவதில் மகிமை இல்லை, திறமானபுலமை யெனில் வெளிநாட்டார் அதைவணக்கஞ்செய்தல்வேண்டும்," என்று முறையிடுகின்றாள் தமிழ்த்தாய். அவளது முறையீட்டுக்கு நாம்செய்ய வேண்டுவது யாது; ஆங்கிலக்கல்வி கற்றுத்தேர்ந்து, அம்மொழிக்கண்நிறைந்து ததும்பும் சாஸ்திரங்களை பாஷாந்தரப்படுத்தல்வேண்டும். ஆங்கிலக்கல்வியை விரும்பிக்கற்கு மாசிரியருக்கு, வேண்டிய உதவிகள்புரிய வித்தியா பகுதியார் ஆயத்தராய் இருக்கின்றனர் என்பது சென்றமாசச் சமாச்சார இதழை நன்கு கவனிப்பார்க்குத் தெற்றெனப் புலப்படும்.

ஆங்கில நாட்டாசிரியர் தம்தாய்ப் பாஷையுடன், வேறும் பலபாஷைகளையும் கற்று, அவற்றிலும் நுண்மாண்புலமை மிக்காராய்த்திகழ்கின்றனர். நம்நாட்டிலும் ஆங்கிலங் கற்பிக்கும் ஆசிரியர் பலர்ஒன்றுக்கு மேற்பட்ட பலபாஷைகளை அறிந்து அறிவுமிக்காராய் விளங்குகின்றனர். தமிழாசிரியர்களும் உலகில் உச்ச நிலை பெற்றுள்ள ஆங்கிலக்கல்வியை முயன்று கற்று முன்வர முயலுதல் வேண்டும். ஆசிரியர் முன்னேற்றங்கருதி உழைக்கும் சமாச்சாரப்பத்திரிகை நிலவுலகில் நின்றிலங்க ஆதியுமந்தமுமில்லா அமலனை நாத் தழும்பேறப் போற்றுவோமாக.

## Teaching Grammar in Schools.

### பாடசாலைகளில் இலக்கணங் கற்பித்தல்.

[திரு. தி. சதாசிவ ஐயர், வித்தியாதரிசி]

நிகண்டு கற்றுச் செய்யுளாராய்ச்சி யுடையாரே இதுகேட்டற்

குரியார் என நன்னூற்சிறப்புப்பாயிரத்
தில் படிக்கின்றோம். சொன்முடிபுகள்
பொருண்முடிபுகளை ஓரளவுக்கு ஆராய்ந்
தறிந்த பின்பே அவற்றிலமைந்துகிடக்கும்
இலக்கணங்களையறிதல் பொருந்து மென்
பது. போதுமளவு இலக்கியப்பயிற்சியும்
அறிவும் பொருந்தப்பெறாத சிறுபிள்ளை
கள்படிக்கும் ஆதாரவகுப்புக்களில் அதா
வது 10, 11 வயதுப்பிள்ளைகள் படிக்கும்
ஐந்தாந்தரத்துக்குட்பட உள்ள வகுப்புக்
களில் "நன்னூல்" போன்ற ஏதும் ஓர்
இலக்கண நூல் பாடபுத்தகமாகவைத்துப்
படிப்பித்தல் ஏற்புடைத்தன்றாகும். அங்
ஙனமே, இலக்கணம் என்றொருபாடம்
வேறாகவைத்துப் படிப்பித்தல் வேண்டா
என ஒதுக்கிவிடுதலும் ஏற்றதொன்றா
காது. எதனாலெனின், இலக்கணவரம்
பிலா ஏனைய சில மொழிகள் போலாகாது
இலக்கணவரம்பு நிரம்பிய உயரிய பழைய
நூற்களஞ்சியமாகிய தமிழ் மொழியைப்
பயின்று தண்டமிழின் மேலாந்தரமாகிய
நூல்களைக்கற்றற்கும் கற்றறிந்து இன்புற்
றுப் பயனடைதற்கும் தமிழிலக்கணவறிவு
ஒருதலையாக வேண்டற்பாலதாகலின்
என்ப.

எழுத்து, சொல், பொருள், யாப்பு,
அணி யென்னும் ஐவகையிலக்கணமும்
முற்றக்கல்லாதார் தமிழ்ச் சாகியத்தா
ருடைய பெரியபொக்கிஷமாகிய பழைய
இலக்கியங்களென்னும் களஞ்சிய வீட்டிட்
புகமாட்டாராய்த் தம்பழைய அறிவுச்
செல்வவளங்க ளெல்லாவற்றையு மிழந்து
வறியராய்க் கழிவர். தம் பழைய பாரம்
பரியங்களையும் பெருமைகளையும் தமக்குரிய
பழைய இலக்கியங்கள்வாயிலாக நேரே
படித்துணரும் ஆற்றலில்லாதவர் தம்மை
யும் தம் சமூகத்தினரையும் உயர்த்தும்
பெரும் குறிக்கோள் ஒன்றும் தம்மனத்து
உதிக்கப்பெறாதவராய்ச் சாமானிய வயிற்
றுப்பிழைப்பு வாழ்க்கை நடத்திச்செல்ப
வராகவே அமைவர். இதனால் தமிழ்
மக்களது தமிழ்க்கல்வி முறையில் தமிழில
க்கண நூலறிவு இன்றியமையாததொன்
றென்பது துணியப் படுமாறுகாண்க.

இனிப் பாடசாலையிற் கீழ்வகுப்பில் எல்
லாம், பிள்ளைகள் இலக்கணப் பிழையின்
றித் திருத்தமாகப் பேசுவதும் எழுது
வதுமே அமையும். இலக்கணவிதிகளை
முதலிற்கல்லாமல் இலக்கணப் பிழையின்
றிப் பேசுவதும் எழுதுவதுமே எப்படி
இயலும் என வினவின் அஃதாமாறு
கூறுதும். மக்கள் இயல்பாக ஒருவரைப்
பார்த்து ஒருவர் செய்யுந்திறனுடையர்.
அவருள்ளும் சிறுவர்களோவெனில் மற்ற
வர்களைப் பார்த்து அவர்செய்வதுபோற்
றாமுஞ் செய்யும் விருப்பம் மிகவுமுடையர்
என்பது அனுபவத்தில் கண்டது. அத
னால் சிறுவர் மற்றவர்களுடைய திருத்த
மான பேச்சையும் எழுத்தையும் பார்த்
துத் தாமும் திருத்தமாகப் பேசவும்
எழுதவும் வல்லுநராவர் என்பது அறியத்
தக்கது. சிறுவர்களுடைய பெற்றார் கற்ற
றிந்த திருந்திய மக்களாயின் அவர்களுடைய
நல்வளர்ப்பினாலும், பாடசாலையில் ஆசிரி
யர்களும் உயர்தர வகுப்பு மாணவர்களும்
பேசும் திருத்தமாகிய பேச்சைப் பன்
முறைகேட்பதனாலும், வகுப்பில் தாம்
படிக்கும் வாசகப்புத்தகப் பயிற்சியினாலும்
முற்குறித்தவாறு இலக்கணப் பிழையின்
றிப் பேசவும் எழுதவும் பழகிக்கொள்வார்
கள். பாடசாலை ஆசிரியர்கள் தம்முட்
கலந்து பேசும்போதும் மாணவரோடு

பேசும்போதும் எல்லாம் திருத்தமான செவ்விய எளிய நடையிற்பேசும் வழக்கத்திற் சிறிதுந்தவறாது ஒழுகல் வேண்டும் என்பது இதனாற் பெறப்படுகின்றதன்றோ! கொச்சையாகவும் பிழையாகவும் ஆசிரியர்கள் பேசுவதைக் கேட்டிருக்கும் மாணவர் எத்தனை இலக்கண விதிகளைக்கற்று நெட்டுருப் பண்ணினவர்களாயினும் அவற்றாலொன்றும் பயனடையாதவராய்த் தாமும் பிழையாகவும் கொச்சையாகவும் பேசும் பழக்கத்தில் நிலைப்படுவர். அது மட்டோ, திருத்தமான செவ்வியநடையிலுள்ள நூல்களைப்படிக்கும் ஆற்றல் வாய்க்கப்பெறாராய் அவற்றில் ஆர்வமிழந்து பேதையரா யொழிவர். அதனால் மாணவரிடை நன்மொழிகாணவேண்டுவார் ஆசிரியர் தாமும் நன்மொழியாளராதல் இன்றியமையாததென்பது.

இனி, மேல்வகுப்புக்களில் ஏறிச் சிறிது தேர்ச்சி பெற்றவர்களாய் வரும்போது அதாவது 9, 10 வயதினராய் 1-ம் 5-ம் தரத்தில் படிக்கும்போது பொருள்விளக்கத்துக்குப் பெரிதும் துணையாகிய இலகுவான சில இலக்கண ஆதாரங்களைக்கற்பிக்கலாம். இவை ஏதுமொரு புத்தகத்திலிருக்கும் விதிகளை நெட்டுருச்செய்வதாயிராமல் வாசிக்கிற பாடத்திலிருந்தும் வேறாகவும் உபாத்தியாயர் தம்மறிவைக் கொண்டு கற்பிப்பதாக இருத்தல்வேண்டும். பிள்ளைகள் உபாத்தியாயர் சொல்வதைக்கேட்டுக் கிளிப்பாடம் பண்ணும்படி செய்வித்தல் முறையாகாது. பிள்ளைகளுடைய முயற்சியும் செய்கைகளுந் தொழிற்படுதற்காகிய அப்பியாசங்களாகக் கொண்டு கற்பித்தல் வேண்டத்தக்கது.

இவ்வகுப்புகளிலும் மேல்தரவகுப்புகளிலும் முக்கியமாக மாணவர் அறியவேண்டிய இலக்கண விஷயங்களாவன :— சொற்களின் வகை, சொற்களினியல், தொடர்மொழியாக்க விதிகள், எழுவாய் பயனிலை முதலியனவாக வசனத்தைப்பாகுபாடு செய்தல், சொல்லாக்கம், சொற்களைமுடித்தல், சொற்றொடர் கூறுதல், சந்திபிரித்தல் முதலியனவாம். இவற்றுள் அவ்வவ்வகுப்புக்கேற்ற பகுதியைத்தெரிந்தெடுத்து விரிவான ஒரு பாடாவலியமைத்துக் கொள்ளுதலும், பாடநேர சூசிகையில் கிழமையில் ஒரு பாடநேரமாவது இரண்டு பாடநேரமாவது இலக்கணபாடம் படிப்பித்தற்காகக் குறிப்பிட்டு வைத்துக்கொள்ளுதலும், அப்பாடநேரங்களிற் குறித்த இலக்கண விஷயத்தை விளக்கிப் படிப்பித்தலும், ஒழிந்த வாசிப்பு, இலக்கிய (எழுத்துப்) பாடநேரங்களில் முன்படித்த இலக்கணங்கள் அவற்றில் அமைந்திருத்தலை எடுத்துக் காட்டிப்பயிலச் செய்தலும் அவ்விலக்கண அமைதிகளை யறிவதனால் பொருள்விளக்கம் சிறத்தலைக்காணச் செய்தலும், ஆசிரியர் தாம் செய்முறையாகக்கொள்ளுதல் பெரும் பயன் விளைப்பதாகும்.

மாதிரிக்கு ஒரு பாடத்திட்டம் அடியிற் காட்டுதும். ஆசிரிய நண்பர்கள் அதனை யாராய்ந்து இன்னும் சேர்க்கவேண்டிய திருத்தங்களைத் தயைகூர்ந்து தெரிவிப்பார்களாக.

4-ம் தரம்— பெயர்ச்சொல், வினைச்சொல், ஒருமை பன்மையிலும் முக்காலத்திலும் வினைச்சொல்வர வாக்கியமியற்றல்; எழுவாய் பயனிலை, செயப்படுபொருள் கூறல்; இவற்றிற்குச் சிறு விசேடணம் வைத்து வாக்கியமியற்றல்.

5-ம் தரம்—பெயர்ச்சொல்:—திணை, பால், வேற்றுமை (இலகுவாய்)

வினைச்சொல்:—முற்று, எச்சம். வினையடியிலிருந்து: வினைச்சொற்களாக்கல் எழுவாய், பயனிலை முதலியன; வசனம் ஆக்குதல்.

6-ம் தரம்—எழுத்தியல்: பகுபதவிளக்கம், பெயரியல், நால்வகைச்சொல், பெயர்ச்சொல் வினைச்சொல் முடிபு, வாக்கியப் பாகுபாடு. செய்வினை, செயப்பாட்டுவினை, தன்வினை, பிறவினை.

7-ம் தரம்—எழுத்தியல், பதவியல், புணரியல் (பொதுவிதிகள்). பெயரியல், வேற்றுமைத் தொகையைவிரித்தல். வினையியல் விஷயங்கள். வாக்கியப்பாகுபாடு.

8-ம் தரம்—(க. பா. வி. த.) ஏழாந்தரத்துக்குரியனவும், புணர்ச்சிவிதிகள் (விரிவாக), அல்வழி, வேற்றுமைத்தொடர்கள் கூறல், தொகையைவிரித்தல், சொற்களை முடித்துக்காட்டல், (நன்னூலிலுள்ள பொதுவிதிச் சூத்திரங்களையும் படிக்கலாம்.) பொழிப்புத்திரட்டல், விரித்துக் கூறல் முதலிய அப்பியாசங்களும் இடம்பெறும்.

சி. பா. ப. வகுப்பு:—நன்னூற் காண்டிகையுரை

ஆசி. த. ப. வகுப்பு:—நன்னூற்காண்டிகையுரை அல்லது விருத்தியுரை. யாப்பணியிலக்கண வினவிடை.

# Vanchippoomalai.

## வஞ்சிப் பூமாலை.

[பண்டித, பூபாலபிள்ளை]

எ. வரந்தரு காதை.

நாடக பாத்திரர்:—சேரன் செங்குட்டுவன். தேவந்தி, மாடல மறையோன்

காலம்:—கூதிர்க்காலம்.

களன்:—திருச்செங்கோடு.

[மின்னுக் கொடிபோன்ற கண்ணகியம்மையாரது கடவுட் கோலத்தைக்கண்ணுற்ற அரசர் பெருமான் தேவந்தியுடன் பின் வருமாறு பேசுகின்றான்.]

சேரன் செங்குட்டுவேன்:—தேவந்தியே! மாதவி மகளாகும் மணிமேகலை யாது காரணத்தினாற் துறவை மேற்கொண்டாள்?

தேவந்தி:—அரசர் பெருமானே! நினது நாடு பெருவளமுடையதாகுக. மாதவியுடைய நற்றாய் மணிமேகலை ஆடரங்குக்குச் சென்று நடிக்கும் பருவமெய்தினள்; அதனால் அவளை நாடகம் நடிக்கப் பயிற்ற வேண்டும் என்பதாக மாதவியைக் கேட்டாள். அதற்குமாதவி கற்பிற்சிறந்த கண்ணகியாருக்கும் மகள் முறை பூண்ட இம்மங்கை ஆடரங்கு சென்று நடித்தற் குரியாளல்லள். யானுந்துறவைமேற் கொள்ளுகின்றேன். அம்மார்க்கமே இவளுக்கும் விருப்புடையதாகும் எனக் கூறி மாதவி மணிமேகலை ஆகிய இருவருந் துறவை மேற்கொள்வாராயினர்.

[இங்ஙனங் கூறிய தேவந்தி பாசண்டனென்னுந் தெய்வமுற்றுப் பற்கடித்து, கூந்தல்குலைத்து, திருமுகம் வியர்த்துச், செங்கண்சிவந்து மாடலமறை யோனிடங் கட்டுச் சொல்லுகின்றாள். மன்னவன்

விம்மிதமெய்தி மறையோனை நோக்குகின்றான்.]

மாடல மறையோன் :—மன்னர் மன்ன கேட்பாயாக. மாடலனென்னுந் தெய்வத்தை யான் வழிபட்டுவந்தேன். அஃது இந்தப்பார்ப்பனப் பெண்ணாகிய தேவந்தி பால் தோன்றி இதோ ஒரு கரகம் நீரளித்திருக்கின்றது. இந்த நீரை இங்கு நிற்கின்ற மூன்றுமகளிர்மீதுந் தெளித்து அவர்களுடைய பழைய வடிவத்தை அடையச் செய்வோம்.

[அந்தணன் கரகநீர் தெளிக்கின்றான். உருமாறியிருந்த கண்ணகி தாயாரும், கோவலன் மாதாவும், மாதரியென்னும் இடைக்குலமாதும், பழையவடிவுடையாராகின்றனர். அவர்கள் அரசன் முன்பு நின்று கண்ணகிகோவலரை நினைந்து இரங்கி அழுகின்றனர். அரசன் மறையோன் முகத்தை நோக்குகின்றான்.]

மாடல மறையோன் :—மன்னர் மன்ன பல்லாண்டு வாழ்வீராக. இவர்கள் பத்தினிக்கடவுள் மீது கொண்ட பெருவிருப்பால் இந்த நகரத்தில் வந்து பிறந்தனர். நற்கருமம்புரிந்தோர் கடவுளை அடைந்து இன்புறுவர். ஆனாற் கண்ணகி கோவலர் மீது கொண்டபேரன்பு இவர்க்கு இந்தப் பிறப்பினை அளிக்கலாயிற்று. நீர்தெய்வ பக்தியிற் சிறந்த ஒரு நல்லரசனான காரணத்தால் இவற்றைக் கண்ணாரக்காணவுற்றீர்.

[சேரன் செங்குட்டுவன் அடங்காவுவகையைத் தன்னுளடக்கிப் பத்தினிக் கடவுளைப் பன்முறைவணங்கிப் பூப்பலி செலுத்தித்தூபதீபந் தவறாது பத்தினிக் கோட்டத்துக்குக் காட்டுமாறு தேவந்திக்குக் கற்பிக்கின்றான். கோட்டத்தை மும்முறை வலம் வருகின்றான், ஆரியமன்னரும், சிறை நீங்கிய அரசரும் ஈழத்தை அரசுசெய்த கயவாகு மன்னனும் நாங்கள் ஆண்டுதோறும் அம்மையே இக்குறித்த காலத்து வேள்விசெய்து நின்னை வணங்குவோம். எங்களுக்கும் எங்களது நாட்டுக்கும் நலனளிக்க வேண்டும் என வேண்டுகின்றனர். அவர் செவியாரத் தந்தேன்வரம் என்றோர் ஓசைகேட்கின்றது. யாவரும் மோட்சவீட்டைக்கண்டவர்போற் பெருமகிழ்வுறுகின்றனர். அரசனை ஆண்டுள்ள குறுநிலமன்னர் வணங்குகின்றனர். அரசன் மாடலமறையோனுடன் கூடி வேள்விச்சாலைக்குச் செல்லுகின்றார். அத்தருணத்து இளங்கோவடிகளும் இன்னுரை வந்தடைகின்றார்.]

இத்துடன் வரந்தருகாதை நிறைவுறுகின்றது. இக்காதையின் ஈற்றில் இளங்கோவடிகள் யாவருங்கைக்கொண்டொழுகுமாறு கூறிய அறவுரை சாலச்சிறந்தன. அதனைவற்றை யாவருமறியும் வண்ணங் கீழ்க் குறிப்பிடுகின்றாம்.

"பரிவு மிடுக்கணும் பாங்குற நீங்குமின்
தெய்வந் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின்
பொய்யுரை யஞ்சுமின் புறஞ்சொற் போற்றுமின்
ஊனூண் துறமின் உயிர்க்கொலை நீங்குமின்
தானஞ் செய்மின் தவம்பல தாங்குமின்
செய்ந்நன்றி கொல்லன்மின் தீநட்பிகழ்மின்
பொய்க்கரி போகன்மின் பொருண்மொழி நீங்கன்மின்

அறவோ ரவைக்கள மகலா தணுகுமின்
பிறவோ ரவைக்களம் பிழைத்துப் பெயர்மின்
பிறர்மனை யஞ்சுமின் பிழையுயி ரோம்புமின்
அறமனை காமின் அல்லவை கடிமின்
கள்ளுங் களவுங் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினி லொழிமின்
இளமையுஞ் செல்வமும் யாக்கையு நிலையா
வுளநாள் வரையா தொல்லுவ தொழியாது
செல்லுந் தேஎத்துக் குறுதுணை தேடுமின்
மல்லன்மா ஞாலத்து வாழ்வீ ரீங்கென்."

யாந் தொடர்புற எழுதிவந்த வஞ்சிப்பூ மாலையும் இத்துடன் நிறைவுறுகின்றது. இச்சிறு தொண்டினை நிறை வேற்றுதற்கு அநுக்கிரகித்த தமிழ்த் தெய்வத்தை மன தார வாழ்த்துகின்றோம்.

இம்மாலையை வாசிப்போருக்குங் கேட்போருக்கும் பத்தினித் தெய்வமாகுங் கண்ணகியம்மையாரது அருள் சித்திப்பதாக.

---

## Rural Science.

### நாட்டுச்சீவன சாத்திரம்.

சி. வீ. சிதம்பரநாதன்.

தற்காலத்தில் வித்தியாசாலைகளில் பாடங்களுள் ஒன்றாக நாட்டுச் சீவனசாத்திரம் படிப்பித்து வரப்படுகின்றது. இப்பாடத்திற்கென வித்தியா பகுதியாரால் ஒரு நூல் வெளியிடப்பட்டுளது. அந்நூல் பெரும்பாலும் நாட்டுச் சீவனசாத்திர சம்பந்தமான குறிப்புக்களை மாத்திரம் அடக்கியுள்ளது. தற்காலத்தில் கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திர பரீட்சை, சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திர பரீட்சை எடுக்கும் பரீட்சார்த்திகள் இப்பாட சம்பந்தமான ஒரு விரிவான நூல் இல்லாமல் பெரிதும் இடர்ப்படுகின்றனர். ஆகையால் காலகெதியில் அறிவுள்ளோர்கள் இதற்கென ஒருவிரிவான நூல் எழுதி உதவுவார்களென எதிர் பார்ப்பதுடன், என் சிற்றறிவிற் கெட்டியவாறும், யான் யாழ்ப்பாணம் அரசினர் கிருஷிக கல்லூரியில் பயின்றகல்வியின் பயனாகவும் தற்காலம் பரீட்சை எடுக்கும் பரீட்சார்த்திகளுக்கு உபயோகமான சிலவிஷயங்களை எழுதத்துணிந்தேன். இதில்வரும் எழுத்துப் பிழை சொற்பிழை, ஆகிய குற்றங்களை அகற்றிக் குணத்தையே எடுத்துக் கொள்ளுமாறு இதைப்படிக்கும் அனைவரையும் வேண்டிக் கொள்கின்றேன்.

முதலாவதாகக் கீடசாத்திரத்தைப் பற்றிக் கூறுவாம்.

தாவரவர்க்கந் தவிர்ந்த வனைய உயிர் உள்ளவைகள் சீவபிராணிகள் என்னும் வகுப்பிலடங்கும். அது மூன்று பிரிவாகப் பிரிக்கப்படும்.

(1) ஒரு கூட்டுப்புழு

(2) முதுகெலும் பில்லாதவை

(3) முதுகெலும்புள்ளன.

(1) ஒரு கூட்டுப்புழு:— இதில் பெரும்பாலும் கிருமிகளை அடக்கும்.

(2) முதுகெலும் பில்லாதவைஇவை பிரதானமாகப் பொருத்துக்கால்கள் உள்ளனவாகஇருக்கும்.

(1) அட்டைக்குடும்பம் :- மட்டத்தேள், அட்டை

(2) நண்டுக்குடும்பம் : நண்டு, ஊரி

(3) பொட்டுப் பூச்சிக்குடும்பம் :- பொட்டுப்பூச்சி, புலிமுகச்சிலந்தி, உண்ணி.

(4) பூச்சிக்குடும்பம் :- வண்டு, குழவி, இலையான், கறையான்

(3) முதுகெலும்புள்ளவை :- இதில் நீர் வாழ்வன, ஊர்வன, பறப்பன, குட்டிக்குப்பால் கொடுப்பன, (குதிரை, நாய், முயல் என்பன)

இரைமீட்கும் மிருகங்கள் : ஆடு, மாடு, எருமை, மான், மரை முதலியன.

குழைவில்லாத கொம்புடையன : மான், மரை

விரிகுளம்புள்ளவை: ஆடு, மாடு, மான், மரை முதலியன.

## பூச்சிக்குடும்பம்.

மூன்று சோடி பொருத்துக்கால்களை உடைய பிராணிகள் பூச்சிகள் என்று சொல்லப்படும். அதற்குதாரணமாக, தத்துவட்டி, தத்தன், கும்பிடுபூச்சி, கறையான், தும்பி, வண்டு, மூட்டுப்பூச்சி, தேனீ, குழவி, முதலியன வற்றைக் கண்டுகொள்க.

## பூச்சியின் பொதுச்சரிதை.

தலை, மார்பு, வயிறு எனமூன்று பிரிவுகளை உடையவைகளாயிருக்கின்றன.

1 தலை : இதில் பரிசக் கொம்புகளும், கண்களும், வாயும் உண்டு.

2 மார்பு : இதில் மூன்று பிரிவுகள் உண்டு. ஒவ்வொருபிரிவினும் ஒவ்வொரு சோடி கால்களும், செட்டைகளும் உண்டு. ஆனால் சிலபூச்சிகளுக்குச் செட்டைகள் இல்லை. உதாரணம், எறும்பு. சிலவற்றிற்கு ஒருசோடி செட்டைதான் உண்டு. உதாரணம், இலையான். இதற்குச் சுக்கான் போன்ற இரு அவயவமுண்டு. பொதுவானபூச்சிகளுக்கு இருசோடி செட்டிடைகள் உண்டு.

3 வயிறு : இதில் ஏழு அல்லது எட்டுப் பிரிவுகள் உண்டு. பூச்சிவகைகளுக்கு இல்லை. அவைகளின் வயிற்றில் வளையம் வளையமாகப் பொருந்து மிடத்தின் இரு பக்கத்திலும் சிறு சிறு துவாரங்களுண்டு. அத்துவாரங்களின் மூலமாகவே சுவாசம் வாங்குதல், விடுதல் நடைபெறுகின்றது. பூச்சிகளின் மூன்று பிரிவுகளாகிய தலை, நெஞ்சு, வயிறு என்பனவற்றுள் நெஞ்சே மிகப்பிரதானமானது. நியாயம் என்னவெனில் சுவாசக்குழல்கள் நெஞ்சுப்பகுதியிலேயே இருக்கின்றன.

## பூச்சிகளின் பொதுச்சீவிய சரித்திரம்.

பூச்சிகள் பெரும்பாலும் அதிகமாக முட்டைகள் இடுகின்றன. இட்டமுட்டைகளிலிருந்து பூச்சிகள் நான்கு பருவங்களை உடையனவாகவும், அற்றதாகவும் இருக்கும். குழவி, வண்ணத்தி என்பன நான்கு பருவங்களை உடையனவாகும். பூச்சிகளிற் சிலதாபரத்தையும், சில இலையையும், சில பூவையும், சிலவேரையும், சிலதண்டையும், உணவாகக் கொள்கின்றன.

பூச்சிகளின் நான்குபருவங்களாவன :—

(1) முட்டைப்பருவம், (2) புழுப்பருவம் (3) கூட்டுப்புழுப்பருவம் (4) பூரணவளர்ச்சிப்பருவம்.

பூச்சிகளை ஏழுகுடும்பங்களாகப் பிரித்திருக்கின்றனர்.

அவையாவன: தத்துவட்டிக்குடும்பம், கறையான்குடும்பம், குழவிக்குடும்பம், வண்டுக்குடும்பம், இலையான்குடும்பம் என்பனவாம்.

தத்துவட்டியின் பொதுக்குணங்கள்: கடிக்கும் வாயை உடையது. பூரண மாறுதல் அற்றது. இருசோடிசெட்டைகளை உடையது. அதில்முதற்சோடி நீண்டு ஒடுங்கி உடம்பில் அமைந்திருக்கும். இரண்டாம் சோடி மெலிந்து அகன்று விசிறிபோல மடிக்கப்பட்டு முதலாம் சோடிச்செட்டையின் கீழமைந்திருக்கும்.

இக்குடும்பத்தைச் சேர்ந்தவை தத்துவட்டி, கரப்பொத்தான், வெட்டுக்கிளி, தத்தன், கும்பிடுபூச்சி, இலைப்பூச்சி தடிப்பூச்சி என்பனவாகும்.

கரப்பொத்தான்: (Cockroach)

தட்டை உடம்பும், செங்கல் மங்கலான நிறமும், முதுகுக்கேடயமும், நீண்டபரிசக் கொம்புகளும் குவிந்த தலையுமுள்ளது. பெண் இனத்திற்குச் சிறகுகளில்லை. சிறகு குறைந்தது. ஆண் இனத்திற்குச் சிறகுகள் உண்டு. கருமை நிறம்உடையது. மாப்பண்டத்தையும், சமைத்தசாப்பாட்டையும் விரும்பும். இரவிலேயே நடமாடும். தண்ணீரில் அதிகம் பிரியமுள்ளது. ஐந்து வருடம்வரை சீவிக்கும். இக்காலத்தில் ஆறு அல்லது எழுமுறை செட்டைகளற்றும்.

கொல்லும்விதம்: போறுக்ஸ் (Borax) என்னும் நச்சுமருந்தை சர்க்கரைப்பாணியுடன் கலந்துவைத்தால் இறந்துபோகும். இம்மருந்தை வேறுபிராணிகள் சாப்பிட்டாலும் அவ்விதமே இறந்துபோகும்.

தத்துவட்டி: இதில்பலநியமானவைகள் உண்டு. சிலகாய்ந்தமணல் நிறமாகவும், சிலபச்சை நிறமாகவுமிருக்கும். கூட்டங்கூட்டமாகவும், தனிமையாகவும் சீவிக்கும். கூட்டமாகச் சீவிப்பவைகளை வெட்டுக்கிளி என்பர். இவைகள் நிலத்தைக் கிண்டி குவியல் குவியலாக முட்டைஇடும். முட்டைகள் நீண்ட வட்டமானவடிவையுடையன. நிலத்தைக்கிண்டுவதற்கு இதன் வாலோடு சேர்ந்தாற்போல இருபக்கத்தும் வாள் போன்ற அவயவம் உண்டு. மழைகாலத்தில் முட்டைகள் பொரிக்கும். தைமாசி மாதங்களே இவைகளின் போககாலமாகும். நெல், புகையிலை, இறுங்கு, தக்காளிமுதலியவற்றை இவைசாப்பிடுகின்றபடியால் கமக்காரனுக்குத்தீமையை உண்டாக்குகின்றன. பூச்சிகளை எழுகுடும்பங்களாக இங்குவகுத்துளோம். கமக்காரனை நோக்கி அவ்வேழுகுடும்பங்களையும் இருபிரிவாகப் பிரிக்கலாம். அவ்விருபிரிவும் எவையெனில் கமக்காரனுக்கு நன்மை செய்வன, தீமை செய்வன என்பனவாம்.

கமக்காரனுக்கு நன்மையான பூச்சிகள்:— தம்பலவண்டு, குழவி, நேரந்தைச்செட்டைப் பூச்சி, பஞ்சமிவண்டின் ஒரு இனம், ஆமைவண்டு, ஆறுபுள்ளிவண்டு என்பனவாகும். தம்பலவண்டு தாவரப் பேன்களைப்பிடித்துத்தின்னுகின்றது. குழவி பயிர்களில் வந்துவிழும் பச்சைப்புழுக்களைத்தூக்கிச்சென்று தங்கள்புழுக்களுக்கு உணவாக்குகின்றது நேரந்தைச் செட்டைப்பூச்சி, பஞ்சமிவண்டின் ஒரு இனம், ஆமைவண்டு, ஆறுபுள்ளிவண்டு என்பன பயிர்களைப் பிடிக்கும் அழுக்கணவனைப் பிடித்துத்தின்கின்றன.

கமக்காரனுக்குத்தீமையான பூச்சிகள்: வெட்டுக்கிளி, அறக்கொட்டியான், அந்துப் பூச்சி, நெற்பயிர் மூட்டுப்பூச்சி அல்லது உகுணைப்பூச்சி, கறையான், எப்பிலாக்கு என்றுசொல்லப்படும் கத்தரிவண்டு, காண்டாமிருகவண்டு, மகிழங்காய் வண்டு, கோணை வண்டுகள், நத்தை, மயிர்க்கொட்டிப் புழு முதலியனவாகும். இவற்றில் முதல் நான்கும் நெற்பயிருக்கும், கறையான், மரங்களுக்கும், கத்தரிவண்டு கத்தரிக்கும், தக்காளிச் செடிக்கும், காண்டாமிருக வண்டு, மகிழங்காய்வண்டு தென்னைக்கும், மற்றையவை பொதுவாகப் பயிர்வகைகளுக்கும் தீங்கைவிளைத்து நட்டத்தை உண்டுபண்ணுகின்றன. (தொடரும்)

## Publications of the Government Medical Department.

### அரசாங்க வைத்திய சுகாதாரப் பகுதிவெளியீடு.

### அசீரணம்

அசீரணமென்னும் வயிற்றுக் குழப்படி தானாகவே ஒரு வியாதியல்ல. அது சீரணசக்தியையுண்டாக்கிக்கொண்டிருக்கும் கருவிகாணத்துக்குத்தொடர்பாய் ஏற்படுங் குழப்படிகளால் சம்பவிக்கின்றது. இக்குழப்படிகள் உண்மையில் உட்கொள்ளப்பட்ட உணவுசீரணசக்தியையுண்டுபண்ணிக் கொண்டிருக்கும் கருவிகரணத்துக்கு அசம்மதமான தென்பதைக் குறிக்கின்றது. இப்படியான அசம்மதம் சரியீனமான உணவுகளால் ஏற்படக் கூடும் அல்லது சதாரணமாய் உணவை யேற்றுச் சீரணிக்கச் செய்து இரத்தமாக்கும் சீரண சக்திக்குரிய கருவிகரணங்களுக் கேற்பட்டுள்ள வியாதிகள் காரணமாயும் நேரிடக் கூடும்.

ஒருவரின்வயது அல்லது வமிசத்துக் குத்தகுதியானதல்ல தாகையால் உணவு செமிபாடாக மலிருக்கக்கூடும். இது பொது அறிவு. ஒரு பராயமானவருக்குக் கொடுக்கப்படும் அதே உணவையொருவர் தன்சிறு குழந்தைக்கொடுக்க மாட்டார். எஸ்கிமோ சாதியாரால் உருசிக்கப்படும் உணவுகள் கொஞ்சமேனும் ஐயமின்றி நம் தேசவாசிகளால் சரியாய்ச் சீரணித்துக் கொள்ள முடியாது. நல்லஉணவாயிருந்த போதிலும் அதுசரியாய்ச் சமையல் பாகஞ் செய்து உதவப்படாவிட்டால் அத்தகைய உணவைச் செமிபாடாக்கிக் கொள்ளுதல் வில்லங்கமான காரியம். உணவுகள் நன்றாகச் சமைக்கப் படாமையால் உணவுகள் அதிகமாய்ச் சேதமாகின்றன. ஒருவரின் வயதுக்கும் வமிசத்துக்குத் தக்கபடி சரியாய்ச் சமையல் பாகம்பண்ணப்பட்ட நல்ல உணவுதானும் உணவைச் சீரணிக்கச் செய்யும் கருவிக்கரணங்களுக் கொருவியாதியும் ஏற்படாமலிருந்தபொழுதும் சரியாய்ச்சப்பியென்று ஆறுதலாய் உட்கொள்ளப்படா விட்டால் அசீரணத்தை ஏற்படுத்தக் கூடும். மத்தியான போசனத்தைக் கொஞ்சநிமிடங்களுக்குள் சாப்பிட்டுக் கொண்டுவருமொருவர் பிற்காலத்தில் தனக்கு செமியாக்குணத்தோ டொத்த வியாதிகள் ஏற்படுகிறதற்கு வழியுண்டு பண்ணுகிறார். இப்படியாய்க் கெதியில் சாப்பிட்டுக் கொண்டு வரும்பழக்கத்தை யுடையவர்கள் மிகஅருமையாய்த்தான் 70 வயதுகாலத்துக்கிருப்பார்கள்.

ஒருவருக்கு அசீரணம் ஏற்பட்டிருந்தால் வயிற்றில் ஏதோ குழப்படியிருக்கிறதென்று பொதுவாய்க் கருதப்படுகிறது. செமியாக்குணம் ஏற்படும் அநுபவமுள்ளவர்களில் நூற்றுக்கு 20 பெயர் விகிதந்தான் வயிற்றில் வியாதியுள்ளவர்களென்று சான்றுகள் கிடைத்திருக்கின்றன.

மனக்குழப்படி, நரம்பெளிர்ச்சி அல்லது வியாதி பெரும்பாலும் உணவைச்சரியாய் உட்கொள்ளவிடாமல் செய்கின்றது. இதனால் குடலுக்குப்போய்ச் சேரும் உணவும் சரியாய்ச் சீரணமாகிறதில்லை. கமக்காரர் அல்லது ஆடுமாடுகளை வளர்ப்பவர்கள் சரியாய் இரைதின்னாத மிருகங்கள் கொழுத்து வளரமாட்டாதென்றறிவார்கள். கிளர்ச்சியடைந்திருக்கும் பொழுது பசுக்களுக்கு இரையூட்டினால் அவைகள் தரும் பாலும் இளப்பமாய்த்தானிருக்கும். நரம்புக்கிளர்ச்சி அல்லது மனோவிகாரம் வயிற்றில் உணவுகள் சரியாய்ச்சீரணமாகாமல் குழப்படிகளையுண்டுபண்ணுகிறதென்று மனிதரில் செய்யப்பட்ட பரிசோதனைகள் தெளிவாய் அத்தாட்சிப்படுத்திக்காட்டுகின்றது. நரம்புக்கிளர்ச்சி அல்லது மனோவிகாரமுடைய மனிதர் பெரும்பாலும் உணவோடும் உணவு உட்கொள்ளாத நேரங்களிற்றன்னும் காற்றையுமுட் கொண்டுவிடுகிறார்கள். இப்படிக் காற்றையுட்கொள்வதால் வாய்வு குடிகொண்டுவிடுகிறது. பெரும்பாலும் பெருதொனியோடு ஏப்பம் வரும். இத்தன்மை பெரும்பாலும் நோயாளிக்கு பயங்கரத்தையுண்டுபண்ணும். ஆனால் ஏப்பம் எவ்வளவு தொனியோடு வருகின்றதோ அவ்வளவுக்கு நோயாளிக்குச் சுகானுபவமுமிருக்கும். அசீரணத்தை ஏற்படுத்தக் கூடிய நரம்புக்குரிய குணங்களைப் பற்றிவற்புறுத்தி யெழுதல் ஒருவேளை இடையூறாயிருக்கும். ஏனெனில் நரம்புக்கிளர்ச்சி அல்லது மனோவிகாரமுடையவர்களுக்குச் சீரணசக்திக்குரிய கருவிகளுக் கேற்படும் வியாதிகாரணமாய் அசீரணமுண்டாகிறதில்லை.

அன்னவாகி அல்லது விழுங்குங்குழாய், ஈரல், பித்தாசயம், பித்து நீர்க்குழல், பெருங்குடல் அல்லது மலரந்திரம், மூளைப்புரி முதுகெலும்புப்புரி, இரத்தமுண்டாக்கும் கருவிகள் முதலியவற்றில் ஏதும் வியாதியுண்டுபடுமானாலும் செமியாக்குணம் உண்டுபடக்கூடும். இவைகளில் ஈரற்குழப்படி, பித்துப்பைக் குழப்படி, மலச்சிக்கு அல்லது வயிற்றோட்டம் முதலியவற்றால் ஏற்படும் அசீரணந்தான் மிகச்சாதாரணமானது.

ஆதலால் ஒருவருக்குச் செமியாக்குணம் உண்டுபடுமானால் அதைப்பற்றிச் சரியான பரிசோதனைசெய்து காரணமென்னவென்று அறிந்துகொள்ளவேண்டுமென்பது வெளிப்படை. பெரும்பாலும் அநேகர் பட்டினிகிடந்து சிபார்சு பண்ணப்பட்ட சுகாதார உணவுகளை உட்கொண்டு அல்லது ஏதும்மைமருந்துகளைச் சாப்பிட்டு அப்போதைக்கப்போது இடர்தீர்த்துக் கொள்ளுகிறார்கள். இப்படியாக இடர்தீர்த்தல் சரியான சிகிச்சையல்ல. அசீரணம் அந்தவேளைக்குச் சுகப்பட்டது போல்காணப்பட்டாலும் ஈரல், குடல், நரம்புக்கட்டு, இரத்தமுண்டாக்கும் உறுப்புகள் முதலியவற்றில், ஏதும் பாரதூரமான வியாதிகளுண்டுபட்டுமாற்ற முடியாத நிலைமையை அடைந்தும் விடும்.

செமியாக்குணத்துக்குக் காரணமென்னவென்று உறுதியாய்க் கண்டறிகிறதற்கு வைத்திய சாஸ்திரம் பெரிதும் உதவியிருக்கிறது. செமியாக்குணத்திற்குக் காரணமென்னவென்று சரியாய்க் கண்டறிகிறதற்கு வைத்தியர் நோயாளியைப் பரிபூரண சோதனை செய்யவேண்டும். மூளை முதுகெலும்புப்புரி, ஈரல், மலரந்திரம், இரத்தமுண்டாக்கும் உறுப்புகள் என்னநிலைமையிலிருக்கிறதென்று கண்டறிகிறதற்கு அததற்குத்தகுந்த கருவிகளைக் கொண்டு உச்சிநின்று உள்ளங்கால்வரையும் பரிபூரண சோதனைசெய்து கொள்ளவேண்டும். இப்படியான சோதனை கொஞ்சம் நேரம் பிடிக்கத்தான் செய்யும். ஆனால் அசீரணம் சாந்தமாயிருக்கும்பொழுது வியாதியைக் கண்டுபிடித்து அதைமாற்றநேரம் செலவிடுவதால் பாரதூரமான வியாதிகளும் மாற்றமுடியாத செமியாக்குணமும் உண்டுபடாமல் பாதுகாத்துக்கொள்ளலாமன்றோ.

இரைப்பையும் அதற்கருகிலுள்ள சிறுகுடரும் சமபந்தமான அசீரணம் ஏற்பட்டிருக்கும் நோயாளிகளில் நூற்றுக்கு 20 பெயர்வரையில் குன்மவியாதிக்கு மிகச் சாதாரணமான காரணம் குடலில் புண் அல்லது பிளவையுண்டாகி யிருத்தல்தான். இரைப்பையில் குழப்படியையுண்டாக்கும் விப்புருதிகளில் அநேகம் உண்மையில் இரப்பையிலுண்டாகி யிருக்கமாட்டாது. அவைகள் அதிகப்பற்றாய் இரைப்பையின் வாயிலுள்ள சிறுகுடரிற்றான் காணப்படும். உண்மையில் சிறுகுடரில் புண்உண்டாதல் இரைப்பையிலுண்டாகும் புண்ணிலும்பார்க்க நாலு மடங்கு அதிகமாயிருக்கும். இவ்விரண்டு இடங்களிலுமுண்டாகும் புண்கள் ஒரேமாதிரியான குணங்குறிகளைத்தான் பிரசின்னமாக்கும். அவைகள் கிட்டமுட்ட ஒரேதன்மையாயிருத்தலால் வைத்தியர்கள் புண் எவ்விடத்திலுண்டாகியிருக்கிறதென்று கவனித்தறிதல் மிகவும் முக்கியமானகாரியம். ஏனெனில் இரைப்பையிலுண்டாகி யிருக்கும் புண் சிறுகுடலுரிண்டாகியிருக்கும் புண்ணிலும் பார்க்க அதிகம் பாரதூரமானது.

இரைப்பையிலுண்டாகியிருக்கும் புண்கள் மலசலங்கழிக்கும் கிருத்தியங்களுக்குப் பெரும் விக்கினங்களை யுண்டுபண்ணும். இவ்விடைஞ்சல் கொஞ்சக்காலத்துக்கு விடாப்பிடியாயிருந்தால் இரத்தப்பெருக்கு, இரைப்பை வெடித்தல் அல்லது பிளவைதானும் உண்டுபடக் கூடும். இரைப்பைக்கப்பால் சிறுகுடரிலுண்டாகும் புண்கள் இவ்விதமான இடையூறுகளை வருவிக்கமாட்டாது. ஆதலால் சிறுகுடரிலுண்டாகும் புண் இரைகுடலிலுண்டாகும் புண்ணிலும் பார்க்க அதிகம் பாரதூரமானதல்ல. அதுவுமல்லாமல் இரைக்குடலுக்கப்பாலுண்டாகும் புண் மிக அபூர்வமாய்த்தான் பிளவையாய்வரும். இரைகுடலிலுண்டாகும் புண்கள் நூற்றுக்கு நாலு அல்லது ஐந்து விகிதம் ஆரம்பத்திலேயே பிளவை மயமாயிருக்கும் அல்லது கொஞ்சக்காலம் சென்று பிளவைப்புண்களாய் விடும். புண்ணுள்ள நோயாளிகள் மிகவும் பயங்கரமுள்ளவர்களாய் வந்துவிட்டார்கள். ஏனெனில் இரைப்பையிலுள்ள புண்சிகிச்சைசெய்து அகற்றப்படாவிட்டால் அது பிளவையாய்வந்து விடுமென்ற விசாலித்த மனப்பதிவு இருக்கின்றது. இரைப்பையிலுண்டாகும் புண்களில் நூற்றுக்குக்கிட்டமுட்ட 95 விகிதமானோருக்கு இப்புண்கள் பிளவைப் புண்களாகவில்லை யென்னும்

அவைகள் மாறிச்சொஸ்தமாகும் இயல்புடையவைகளென்றும் நிரூபிக்கிறதற்குப் போதிய சான்றுகளிருக்கின்றன. "எக்ஸ்ரே" (X' Ray) என்று சொல்லப்படும் சோதனைகளாலும், இரைப்பைசிறுகுடர் முதலியவற்றிலுள்ள அடக்கங்களைப்பரிசோதனை பண்ணிப்பார்ப்பதினாலும், மலங்களைச் சோதித்துப் படிப்பதினாலும் ஒருவர் இரைப்பையில் அல்லது சிறுகுடரில் புண்ணுண்டாகியிருக்கிறதோ அல்லவோவென்று அத்தாட்சிப்படுத்திக் காட்ட முடியாததுமன்றி பிளவையிருக்கோ அல்லவோவென்றும் அநேகமாய்ச் சொல்லத் தக்கதாயுமிருக்கும்.

இரைப்பையிலுள்ள பிளவை நோயை சத்திரவைத்தியம் செய்தேயொழிய மற்றும் என்ன விதமாயும் மாற்றமுடியாது. இரைப்பையிலுள்ள புண்வேதனையைத்தருமோர் நோய்இவ்வேதனை இரைப்பை வெறுமையாயிருக்கும் பொழுது அல்லது உட்கொண்ட உணவு செமிபாடாகுந் தருவாயிற்றான் மிகக்கடுமையாயிருக்கும். புண்வியாதிக்காரர்தான் பிளவை வியாதிக்காரருக்கு முன் வைத்தியரை நாடுவார்கள். இதனால் அவர்களின் வியாதியை நேரகாலத்திலறிந்து வைத்தியம் செய்யத்தக்கதாயிருக்கிறது. இரைப்பையில் பிளவை நோயுள்ள வியாதிக்காரர் வைத்தியரிடம் வியாதியுண்டுபட்டவுடன் போவது மிக அரிது. இதனால் ஐந்து நோயாளிகளில் ஒருவரையாவது கரைகடந்த சத்திரவைத்தியம்செய்து தன்னும் மாற்றுதல் மிக அரிது.

இரைப்பையிலுண்டாகும் புண்ணும் பிளவையும் நடுவயதில் மிகவும் சாதாரணமாயுண்டாகும் நோய்கள் பிளவைக்கு உண்மையில் வயதுகிடையாது. ஆனால் இரைப்பையுலுண்டாகும் பிளவை அதிகப்பற்றாய் 50 வயதுக்குப் பிற்பாடுதான் ஏற்படுகின்றது. இரைப்பையிலும் சிறுகுடரிலுமுண்டாகும் புண் அதிகப்பற்றாய் 40-ம் வயதிலுண்டாகிவிடுகிறது, ஆதலால் நடுவயதுக்காரரும் அதற்குமேற்பட்டவர்களும் செமியாக் குணமிருந்தாலென்ன இல்லாவிட்டாலென்ன குறைந்தது வருடமிருமுறை சீரணசக்தியுண்டாக்கும் கருவிகரணங்களைப் பூராய் வைத்தியரைக் கொண்டு சோதித்துப் பார்த்துக்கொள்வது புத்தியான காரியம். உண்மையில் இவ்விதம் செய்துகொள்ளல் அநேகரோளாறுகளுக் குதவியாயிருக்கும். மலசலக்கழிவு ஈரலில் அல்லது மலக்குடலில் உண்டாகும் வியாதிகள், இரப்பையிலும் சிறுகுடரிலும் உண்டாகும் புண் அல்லது பிளவை நரம்புக் கட்டுகளுக்கேற்படும் விபரீதங்கள், இரத்தமுண்டாக்கும் கருவிகளுக்கேற்படும் குழப்படிகள் முதலியவற்றை நேரகாலத்திலறிந்து அதற்குவேண்டிய சிகிச்சைகளைச் செய்துமாற்றிக் கொள்ளலாம். கவலையீனமாய் விட்டு விட்டாலோ பின்பு குன்மம் உண்டாகிப்பெரும் வேதனையையும் துன்பத்தையும் அனுபவிக்க வேண்டிநேரிடும். செமியாக்குணமிருந்தால் அதைமாற்றுகிறதற்கு அல்லது அது ஒருவரால் தடைசெய்து கொள்ளுகிறதற்குக் காலத்துக்காலம் வைத்தியசோதனை செய்துகொள்ளுதல் இன்றியமையாத காரியம். ஆரோக்கியம் மனிதனின் பிறப்புரிமை. ஆனால் இப்பிறப்புரிமை அதன் நேர்மையைப் பேணிக்கொள்ள வேண்டுமானால் சிலபரித்தியாகங்களைக் கேட்டுநிற்கின்றது. செமியாக்குணமிருக்கு மொருவர் பிரதானமாய்

செய்ய வேண்டிய பரித்தியாகம் தன்னுடம்பைக் காலத்துக்குக்காலம் பரிசோதிப்பித்துக்காணப்படும் குறைப்பாடுகளை நிவிர்த்திபண்ணிக்கொள்ளுதல்தான்.

---

# Infant Teaching.

## பாலரைப் பயிற்றல்.

[தி.ரு. S. X. குமாரவேலு]

இக்கட்டுரை யாதோர் புதிய முறையைக் கூறவாவது, சில முறைகளை ஆதரித்தும் சில முறைகளைக் கண்டித்தும் பேசுதற்காகவாவது எழுந்ததன்று. ஆயின் இக்கடுரை ஆசிரியரின் சில அனுபவங்களை ஈண்டுக்கூற வெழுந்ததென்க.

இக்காலத்திலே பாலர் கல்வியானது பல நவ முறைகளை யுடைத்தாயிருக்கின்றது. ஆயினும் முறைகள் சில பேரறிஞர்களாலும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களாலுமே கைக்கொள்ளப் பட்டு வருகின்றன வென்றுரைக்கின் அதுமிகையாகாது. உள் நாடுகளில் வசிக்கும் பல ஆசிரியர்கள், பேரறிஞர்களா லெடுத்தாளப்படும் முறைகளைப் பின்பற்றச் சந்தர்ப்பம் வாய்க்காதவர்களாயிருக்கின்றனர். நகர்ப் புறங்களில் வசிப்போரும், போக்குவரவுச் சாதனங்கள் மலிந்துள்ள நாட்டுப்புறங்களில் வசிப்போரும் பலப்பல நவமுறைகளைக் கண்டு தெளிதற்கு அதிட்டவசத்தினராயிருக்கின்றனர். ஆயின் என் போன்ற சிலர் அவ்வசதிகளற்றோராய் இருக்கின்றனர். அன்னோர் மனத்திடை யெழுஞ் சந்தேகங்களைத் தானும் எவ்வாறு நீக்கிக் கொள்வதென்று மயக்கமுறுகின்றனர். அவ்வாறெழுந்த சந்தேகத்தை நீக்குவான் துணிந்தே யிக்கட்டுரையை எழுதத் துணிந்தேன்.

இங்கு கூறப்படும் முறை சிறந்ததென்றாவது அல்லது யாவராலும் அனுசரிக்கப்படக்கூடிய தென்றாவது கூறுதற்கருகதையுள்ளவனல்லன். இக்கட்டுரையைக் காணும் பேரறிஞர் இதன்கண் மலிருந் தவறுகளை இச்சமாச்சாரத்தின் வழியாக எனக்கறிவுறுத்துமாறு மிக விநயத்துடன் கேட்டுக் கொள்ளுகின்றேன். என்பிழைகளையப்படுமேல், அதுவே நானெடுத்துக் கொண்ட முயற்சிக்குப் பிரதிபலனாகும்.

பாலர்க்குக் கற்பிக்கப்படும் பாடங்கள் ஒன்றுடனொன்று தொடர்புடைத்தாயிருக்கவேண்டுமென்றும், அவ்வாறு தொடர்புறுமுறையாகக் கற்பிக்கப்படின் அவ்வித கல்விபெரும் பயனையளிக்குமென்றும் வித்தியா விற்பன்னரும் பிறருங் கூறுநிற்பர். அவர் கூற்றின்படி எல்லாப் பாடங்களையும் தொடர்புறச் செய்து கற்பிக்கலாமோ வென்று சிறிதாராய் வோம்.

### வாசினை.

வாசினை கற்பிப்பதில், எழுத்துக்களை முதலில் அறியச் செய்து பின்னர் சொற்களைக் கற்பிக்கும் பண்டைய முறைவழக்காறொழிந்தது. இப்போது சொற்களைக் கற்பித்த பின்னரே அச்சொற்களிலுள்ள எழுத்துக்களின் ஒலிவித்தியாசம் கற்பிக்கப்படுகின்றது. கருத்தமைந்த சொற்கள், வாக்கியங்கள் கற்பிக்கப்படும் போது படங்கள், பொருட்கள் முதலிய உபகரணங்கள் பெரிதும் உபயோகிக்கப் படுகின்றன. பிள்ளைகள் அச்சொற்களை வாசித்து அவற்றாற் குறிக்கப்படும் கருத்தைக் கிரகிக்கு மாற்றலைப் பெறுகின்றனர்.

நாம் வாசினை கற்பிக்கும் போது சில விதிகளை யனுசரித்தே சொற்களையும், வாக்கியங்களையும் கற்பிக்க வேண்டும். சொற்களை ஆக்கும் எழுத்துக்கள் ஒரு முறை தழுவியிருக்கப்பார்த்துக் கொள்ள வேண்டும். உயிரெழுத்துக்களாலாக்கப்பட்டசொற்களைக் கற்பித்த பின்னரே மற்றைய சொற்கள் கற்பிக்கப்பட வேண்டுமென்று ஒரு சாரார்கூறுவர்; பிள்ளைகளறிந்த பொருட்களின் பெயர்களைக் கற்பித்த பின்பே மற்றைய சொற்களைக் கற்பிக்கவேண்டுமென்பர் மறுசாரார். பெரும்பாலான பிள்ளைப்பாட புத்தகங்கள் உயிரெழுத்து முறைபற்றி எழுதப்பட்டிருக்கின்றன. ஒருசிலவே யிதற்கு மாறுயுள்ளன.

இங்கு கூறப்பட்ட முறைகளுள் எது தகுதியானதென்று தெரியுமுன் பாலரைப் பற்றிய ஒருவிஷயத்தை நாம் எம் மனத்திலிருத்திக் கொள்ள வேண்டும். அஃதென்னையோவெனின் பாலர் ஒரு நேரத்தில் ஒரு விஷயத்தையே நோக்குதற்கும், கிரகித்தற்கும் உரிய சக்திவாய்ந்தவர்களென்பதேயாம். வகப்பெரு வெளியிற் பிள்ளைகளை விட்டு அவர்கள் அவதானத்தை யொரு வழிப்படுத்த நினைப்பது பயனளியாப் பிரயத்தனமாகும். வெவ்வேறு குணங்களையுடைய பல பொருட்களை அவதானிப்பதும் பாலராலியலாக்கருமம். அவ்வாறே பலவகைப் பட்ட எழுத்துக்களா லாக்கப்பட்ட சொற்களைக் கிரகித்துக் கொள்ளுதலும் முடியாத தொன்றாகும். படங்கள், பொருட்களின் துணைக்கொண்டு கற்பிக்கப்படினும், இலகுவான முறையிற் கொண்டு செல்லப் படாவிடின் அது பிள்ளைகளுக்குப் பெரும்பயனளிக்க மாட்டாது.

உதாரணமாக அம்மா, அப்பா, அணில், அம்பு, என்ற சொற்களை எடுத்துக் கொள்வோம். இங்கே உயிரெழுத்தையும், மெய்யெழுத்துக்களையும், உயிர் மெய்யெழுத்துக்களில் 'ஆ' வரிக்குரிய எழுத்துக்களையும், 'இ' வரிக்குரிய எழுத்தையும், 'உ' வரிக்குரிய எழுத்தையும் பாலர் அவதானிக்க வேண்டியவராயிருக்கின்றனர். வரிவடிவோடு ஒலியையும் அவதானிக்க வேண்டும். ஆகவே யவர்கள் கவனம் பல வழிகளிற் சிதறுண்ணும். மேற்படி சொற்களில் 'அ' ஒன்றனையே கிரகித்துக் கொள்வது நோக்க மாயின் மற்றைய வெழுத்துக்கள் மேற்கூறிய சொற்களுக்கு அகத்தியமின்றே? அன்றியும், தனியெழுத்துக்களைப் பிரித்தெடுத்தலும் விரும்பப் படத்தக்க தொன்றல்லவே.

மேற்கூறிய இரு முறைகளையுந் தழுவி ஒரு இலகுவான முறையை யனுசரிக்கலாமென்று கருதுகின்றேன். அம்முறையை ஈண்டுக் கூறுவேன்.

உதாரணமாக பின் வருஞ் சொற்களை ஒரு ஆரம்பவாசினைப் பாடத்திற்குரிய சொற்களாக எடுத்துக் கொள்வோம்.

அவை.

படம் (ஒருபடம்) பட்டம் (காற்றடி)
மரம் பழம்

இங்கே குறிக்கப்பட்ட சொற்களைப் படத்தின் மூலமாயும், பொருட்களைக் காட்டியும் அல்லது வேறு சாதனங்களைத் துணைக்கொண்டும் கற்பிக்கலாம். ஆயின் இங்கு கவனிக்க வேண்டிய ஒருவிஷயம் உண்டு. அஃதென்ன வெனின் மேற்படி சொற்களைப் பிள்ளைகளிடங் கேட்டறிந்த பின்னரே அச்சொற்களைப் பிள்ளைகள் வரி

வடிவில் அவதானித்து வாசிக்கச் செய்ய வேண்டும் என்பதே. அல்லது, கரும்பலகையிலெழுதப் பட்ட அச்சொற்களினருகில் சொற்களாற் குறிக்கப்படும் பொருட்களினுருவம் (படம்) கிறிவிடப் படவேண்டும். அப்படிச் செய்யா விடின் ஆசிரியர் சொல்லிக் கொடுக்கவேண்டிய சந்தர்ப்ப மேற்படும். சொற்கள் பெரிய எழுத்துக்களிற் பூரணஉறுப்பமைய கரும்பலகையி லெழுதப்பட்டு வாசிப்பிக்கப் படவேண்டும். ஆரம்பத்தில் புத்தகத்தில் வாசிக்கப் பயிற்றுவது தவறாகும்.

இங்கு எடுத்துக் கொள்ளப் பட்ட சொற்களை யுற்றுநோக்கின் அவைகளிலுள்ள மெய்யெழுத்துக்கள் தவிர்ந்தவனைய வெழுத்துக்களையே பிள்ளைகள் அவதானிக்கின்றனர். அன்றியும், எடுத்துக் கொள்ளப்பட்ட சொற்கள் இலகுவான வெழுத்துக்களா லாக்கப் பட்டவை; எழுதுதற்கோ, விதைகள் கொண்டடுக்கு வதற்கோ சுலபமானவை. எழுத்தோடு (எழுதுதல்) சம்பந்தப் பட்ட விடயங்கள் எழுத்தின் கீழ்க் கூறப்படும். மேற் கூறியவாறு 'அ' வரியி லடங்கும் எழுத்துக்களாலாக்கப் படக்கூடிய இலகுவான சொற்கள் கற்பிக்கப்பட்ட பின்னர் அப்பாற் செல்லலாம். ஒரு வரியிலுள்ள எல்லா எழுத்துக்களுங் கற்பிக்கப்பட வேண்டு மென்பது கோட்பாடன்று. மெய் யெழுத்துக்கள் பொதுவாக எங்கும் விரவி நிற்குமாதலின் அவற்றைக் கலந்து கற்பிப்பதே தகுதியுடைத்தாம்.

அப்பியாச பாடங்கள் நிகழும்போது—விரும்பின் ஒவ்வொரு வரியுங்கற்பிக்கப்படும்போது—ஒவ்வொரு வரிக்கு முரிய பொதுவான இலக்கணத்தை, பிள்ளைகள் அவதானிக்கும்படி செய்யலாம். ஆயின் எச்சொல்லையாவது எழுத்துக் கூட்டிக் கற்பிப்பதை, விசேடமாய் ஆரம்பகாலத்தில், தவிர்க்க வேண்டும்.

ஏவற் சொற்களைக் கற்பிக்கும் போதும் அச்சொற்களிலுள்ள எழுத்துக்கள் படித்த வரிகளுள் அடங்குவனவா யிருக்கப்பார்த்துக் கொள்ளுதல் உத்தமம். உதாரணமாக நட, கட, அள, அள், போன்ற தனி ஏவற் சொற்களை 'அ' வரிச் சொற்களைக் கற்பிக்கும் போதும்; வா, தா, பார், படம் பார், பழம்தா, சதம் தாபோன்ற ஏவல்களை 'ஆ' வரிச் சொற்களைக் கற்பிக்கும் போதும் புகட்டலாம்.

ஒரு படத்தின் அல்லது ஒரு பொருளின் பெயரை, தனித்தனியாயுள்ள காகித மட்டைகளில் வெட்டப்பட்ட எழுத்துக்களைக் கொண்டு ஆக்கச்செய்யலாம். அவ்விதஞ் செய்யும்போது தவறு வாராயின் முழுச் சொல்லைக் கரும்பலகையிலெழுதி அதனைப் பார்த்துப் பின்னமைக்கச் செய்யலாம்.

இலகுவான சொற்களும், வாக்கியங்களும், ஏவல்களும் எழுதப் பெற்றுள்ள "தோற்றி மறையும்" காகித மட்டைகளைப் பாவித்து அவற்றாற் குறிக்கப்படும் கிருத்தியங்களைப் பிள்ளைகள் செய்யும்படி விடலாம். அப்படிச் செய்யும்போது அவர்களுக்கு உற்சாக முண்டாகும்.

## பேச்சு.

பேச்சு என்ற தலைப்பின் கீழ் கதைகள், பாட்டுக்கள், நாளாந்த சீவியத்தோடு சம்பந்தப்பட்ட சம்பாஷணைகள் அடங்கும். இவை யொவ் வொன்றும் நேர குகியிற் தனித்தனியிடம்பெறல் வேண்டுமென்பது

பிரமாணமல்ல. மற்றைய பாடங்களோடு இவை கலந்து கற்பிக்கப் படலாம்.

கதைகள்: சில பழைய கதைகளைச் சொல்லலாம்; அன்றேல் புதிதாகச் சில கதைகள் ஆக்கிக் கொள்ளலாம். அதனைத் தெரிந்து கொள்ளும் விஷயம் ஒவ்வொரு ஆசிரியராலும் விடப்படவேண்டும். சொல்லப் படும் கதைகளில் அன்றாடு கற்ற வாசினைப் பாடச்சொற்கள் விரவியிருப்பின், கதை வாசினைப் பாடத்தோடு தொடர்புறுவதுமன்றி, பிள்ளைகள் தாம்கற்ற சொற்களை ஞாபகப்படுத்தற்கும் ஏதுவாகும். மேலே எடுத்துக் கொண்ட சொற்களில் பட்டம், மரம், பழம் என்ற சொற்கள் இடையிடையே இடம் பெற்றிருக்க ஒருகதையை ஆக்கிக் கொள்ள வியலும்.

கதைகளைச் சொல்லும் போது படங்கள், உபகரணங்களின் துணைக் கொள்ளுதலவசியம்; அன்றேல் கவர்ச்சி யுண்டாகாது. கதைகளோடு சம்பந்தம் பூண்ட வினாக்களை ஆசிரியர் பிள்ளைகளிடத்தும், பிள்ளைகள் தம்முட்டாமும் வினவி விடையிறுக்கப் பயிற்றுவதினால் பெரும் நலன் விளையும்; கதைகளின் சாரத்தையும் பிள்ளைகள் கிரகித்துக்கொள்ளுவர். பிள்ளைகள் திருப்பிக் கதையைச் சொல்லுதல், நடித்தல், கதையை விளக்க உருவங்களமைத்தல் முதலிய கிருத்தியங்கள் கதை சொல்லிய பின் நிகழ்த்துதற் கமைவானவை.

பாட்டு: அபிநயிக்கக் கூடியனவும், கதைகளைக் குறிப்பனவுமான பாட்டுக்களைத் தெரிந்தெடுத்தல் மிகவும் நன்று. வகுப்புக்குச் சொல்லப் பட்ட கதையை விளக்கும் பாட்டாயின் அதைப் பாலர் கெதியிற் கிரகித்துக் கொள்ளுவதோடு கூறப்படும் அபிநயங்களையும், நடிப்புக்களையுந் தாமே செய்யக் கூடியவராவர், உற்சாக மூட்டும் பாட்டுக்கள் உயரியன வெனின் இழுக்காகாது.

சம்பாஷணை: ஆசிரியர் மாணவரோடு பிள்ளைகளின் சுகம், சுத்தம், பழக்கம் முதலிய விஷயங்களைப் பற்றிக் கலந்துரையாடலாம்; பிள்ளைகள் தாமே சில விஷயங்களைச் செய்யுமாறு விடப்படலாம். தாங்கள் கலந்தாலோசிக்கும் விஷயங்கள் நாளாக்தம் சாதனையில் கொண்டு வருதற் கேற்ற உபாயங்களைக் கையாடலாம். பிள்ளைகளிடங் காணப்படும் சில வியாதிகள், கெட்ட பழக்கங்கள் இவற்றைப் பற்றிச் சம்பாஷித்து அவற்றை நீக்குதற் கேற்ற உபாயங்களைச் சொல்லிக் கொடுக்கலாம்.

## எழுத்து.

எழுதப் பழக்கும் போது இலகுவான எழுத்துக்களையே முதலிற் பயிற்ற வேண்டும். அதுவும் பிள்ளைகள் கற்ற வாசினைப் பாடத்தி லுள்ள எழுத்துக்களாயுமிருக்க வேண்டும். அணில் என்று கற்ற மாணவனுக்கு 'ட' என்ற எழுத்தை எழுதப் பயிற்றுவது எவ்விதத் தொடர்பு மற்ற கிரிகையாகும். ஆகவே இலகுவான வற்றிலிருந்து கடினமானவற்றிற்கு வழிநடத்துவதோடு அறிந்தவற்றையு மவற்றுடன் சம்பந்தப்படுத்துதல் வேண்டு மென்பது தெளிவாகும்.

முதலில் ஒரு நிறுதிட்டக் கீறு (1) எழுதப் பழக்கி அது ஒன்று என்பதைக் குறிக்கும் எனச் சொல்லிகணிதத்தோடு சம்பந்தப் படுத்தலாம். பின்னர் ட, ப, ய, ம, ழ, ர, ங, ந, ற, ச, க, த, ள, வ, ல, ன, ண எனும்முறை பற்றி எழுதப் பயிற்றலாம்.

முதலில் ஆசிரியர் எழுத, பிள்ளைகள் அவர் கிரியையைப் பின்பற்றி எழுதவேண்டும். பின்பு கரும்பலகை எழுத்தைப் பார்த்தெழுதலாம்.

மணலில் எழுதிப் பழகிய பின்பே கற்பலகையில் எழுதப் பயிற்ற வேண்டும் என்பது ஆதாரமற்ற பிரமாணமாகும். மணலில் எழுதுவித்த பின் கற்பலகையி லெழுதுவித்தல் இலகென்பார் கூற்றுக்கு, மணலில் எழுதப்பழகும் முறையும், கையினைப் பிரயோகிக்கும் முறையும் கற்பலகையி லெழுதப்பயிலுதற்கு எவ்விதத்திலும் துணைபுரியா என்னும் சமாதானமே கூறத்தகும். மணலில் எழுதுவதை அறவே நீக்கிவிடின் மாணவரின் சுகமும் சுத்தமும் நன்னிலையை யடையும்.

பிள்ளைகள் தொடக்கத்தில் கரும்பலகையெழுத்தைப் பார்த்தெழுதும் போது கோடுகளினிடையே எழுத வேண்டுமென்றநியதியில்லை. ஆரம்பத்தில் அப்படிச் செய்யின் பிள்ளைகளின் கரங்களைப் பெரிதும் கட்டுப் படுத்த நேரிடும். அதனால் எழுதுவதின் மட்டில் பிள்ளைகளுக்கு வெறுப்புண்டாகக் கூடும். மாணவர் எழுதுவதில் சற்றே பயிற்சி பெற்றபின் கோடுகளினிடையே எழுதப் பயிற்றலாம். எத்தனை கோடுகளில்எழுதப் பயிற்றவேண்டுமென்பதை ஒவ்வொரு ஆசிரியரும் தீர்த்துக் கொள்ள வேண்டியது அவர் கடனாம்.

ஆரம்பத்தில் தனி எழுத்துக்களை எழுதப் பயிற்றினும் பின்னிட்ட காலங்களில் இலகுவான சிறு சொற்களையே பார்த்தெழுதச் செய்ய வேண்டும். பின்னர் அச்சொற்களை அவர்கள் வாசிக்கும்படி செய்யலாம்.

### எண்.

கணித பாடத்தைக் கற்பிப்பதற்கு விதைகள், தடிகள், காசு எண்சட்டம் முதலிய உபகரணங்களைப் பாவனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு நேரம் பொருட்களின்றி மாணவரையே உபகரணமாகப் பாவித்துக் கற்பிக்கலாம்; மறு நேரம் சிலவிளையாட்டுக்களைத் துணைக் கொண்டு கற்பிக்கலாம்.

பிள்ளைகள் முறையே எண்ணி வகுப்பிலுள்ள பிள்ளைகளின் தொகையைக் கணக்கிடுவதினாலும், தடிகள், சதக்காசு முதலியவற்றை எண்ணுவதினாலும் சிலவிளையாட்டுக்களின் வெற்றியைக் கணக்கிடுவதினாலும் எண்ணைப் பயின்று கொள்ளலாம்.

சற்று ஆழ்ந்து சிந்திப்பின் வெவ்வேறு விளையாட்டுக்களின் மூலம் பாலர்க்குக் கணிதம் கற்பிக்கலாம். ஆயின் பிள்ளைகட்கு வெறுப்பை வருவிக்கும் விளையாட்டுக்களைப் புகுத்துதல் புத்தியாகாது. "கடதாசிக் கூட்டத்தி"லுள்ள ஒன்று தொடக்கம் பத்து வரையும் உள்ள தொகையைக் குறிக்கும் கடதாசிகளைத் தெரிந்தெடுத்து அவற்றைக் கொண்டு கணக்குக் கற்பிக்கலாம். வட்டத்துக்குள் பிள்ளைகளை நிற்கச் செய்து ஒவ்வொருவராயும், பலராயும் வெளியேற்றுவதினால் கணக்கை விளையாட்டாகக் கற்பிக்கலாம். இன்னோரன்ன பலப் பல முறைகளைக் கையாண்டு "எண்" என்னும் பாடத்தைக் கற்பிக்கலாம்.

மேற்கூறிய ஒழுங்கின் படியே பாடங்கள் கற்பிக்கப்படவேண்டும் என்ற நியதியில்லை. ஒவ்வொரு ஆசிரியரும் தம் வசதிக் கேற்ப மாற்றிக் கொள்ளலாம்.

பாடங்கள் எம்முறை பற்றிக் கற்பிப்பினும் ஒன்றுடனென்று தொடர்பு பற்றியிருப்பின் விசேடமுடைத்தாம்.

ஈண்டு விரிவஞ்சி விளையாட்டு, சிரமப் பயிற்சி முதலாம் பாடங்களைப் பற்றியாதும் விபரியாது தவிர்க்கப்பட்டது.

பிழையை அறிவுறுத்தும் அறிஞர்பால் எங்கன்றி முன்னேக்கியே செல்வதாக.

---

## Departmental Circulars.

### வித்தியாபகுதிச் சுற்றுநிருபங்கள்.

சுற்றுநிருபம் இல: B 16.
21-10-33

எல்லா அரசினர் பாடசாலைகளினதும் ஆசிரியர்களுக்கு.

#### அதிகார சம்பந்தமான பார்சல்களின் தபாற் செலவு.

1933-ம் ஸு ஜூலை மீ 18ந் தேதியைக் கொண்ட B 11-ம் இலக்க சுற்றுநிருபத்தின் சார்பாக அநேக ஆசிரியர்கள் கடித மூலமாக அனுப்ப வேண்டிய சாமான்களைப் பார்சல் மூலமாக அனுப்புகிறது கவனிக்கத்தக்கதாக விருக்கிறது. ஆகவே, எல்லாவிதமான அச்சடித்த அல்லது எழுதப்பட்ட பத்திரங்கள், அஃதாவது, சம்பளப்பற்றுச் சீட்டுக்கட்டைகள், இடாப்புகள், கணக்குப் புத்தகங்கள் முதலியன கடித மூலமாக வன்றி பார்சல் மூலம் அனுப்பப்படலாகாது.

சுற்றுநிருபம் இல: E 31.
25-10-33

உதவிநன்கொடை பெறும் சுவபாஷா பாடசாலைகளின் முகாமைக்காரர்கட்கும் அரசினர் பாடசாலைகளின் தலைமையாசிரியர்கட்கும்.

#### வரவின் சுருக்கங்கள்.

ஒவ்வொரு வகுப்பினதும் வரவைச் சரிபிழை பார்ப்பதற்கு இலகுவாக விருத்தற் பொருட்டு, மறுபக்கம் காணும் மாதிரியிற் காட்டப்பட்டிருக்கும் மாதிரியாக வரவின் சுருக்கங்கள் வைக்கப்பெற்றிருத்தல் வேண்டும். ஒவ்வொரு வகுப்பிலும் வந்திருக்கும் பிள்ளைகளின் தொகையும், வந்திருக்கும் பிள்ளைகளின் முழுத்தொகையும் ஒவ்வொரு நாளும், இடாப்புக்களின் அடையாளம் முடிந்தவுடன், இச் சுருக்கத்தில் குறிக்கப்படல் வேண்டும்.

சுருக்க மாதிரி :—

..........................................பாடசாலை.

(மாசம்)..............................

| வகுப்புகள் | இடாப்பிலுள்ள தொகை | ........................ கிழமை முடிவு | | | | | ........................ கிழமை முடிவு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தி | செ | பு | வி | வெ | தி | செ | பு | முதலியன |
| பாலர் பிரிவு (கீழ்) | | | | | | | | | | |
| ,, ,, (மேல்) | | | | | | | | | | |
| வகுப்பு II ... | | | | | | | | | | |
| ,, III ... | | | | | | | | | | |
| ,, IV ... | | | | | | | | | | |
| ,, V ... | | | | | | | | | | |
| ,, VI ... | | | | | | | | | | |
| ,, VII ... | | | | | | | | | | |
| ,, VIII ... | | | | | | | | | | |
| மொத்தங்கள் ... | | | | | | | | | | |

சுற்றுநிருபம் இல: E 30.
25-10-33

உதவி நன்கொடை பெறும் ஆங்கில, சுவபாஷா, இருபாஷா, பாடசாலைகளின் முகாமைக்காரக்கட்கு.

பயிற்சி பெறும் ஆசிரியர்களுக்கான லீவு.

அநுமதிக்கப் பெற்ற பயிற்சிக்குரிய காலம் ஒன்றில் பயிற்றப் பெறுவதற்காக, உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்களுக்கு இருவருட சம்பளமற்ற லீவு அளிக்கப்படலாம். ஆயின், இவ்விதமான விசேஷ உரிமையைப் பிரயோசனப்படுத்த விரும்புகிறவர் எவரினதும் பெயரை முகாமைக்காரர், விதிப்படி அங்கீகரிக்கும் முறைக்காக வித்தியா பகுதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

2. உதவி நன்கொடை பெறும் ஆங்கில பாடசாலைகளுக்குரிய ஒழுங்குச் சட்ட பிரமாணத்தின் 31ம் பிரமாணப்படி அல்லது உதவி நன்கொடை பெறும் சுவபாஷா இருபாஷா பாடசாலைகளுக்குரிய ஒழுங்குச்சட்ட பிரமாணத்தின் 37ம் பிரமாணப்படி ஆசிரியர்களின் தொகை இப்பொழுதும் கணக்கிடப்பட்டு வரும் பாடசாலைகளின் விஷயத்தில், ஆசிரியர் தமது பயிற்சிக்காலம் முடிந்து வந்ததும் காலியான விடத்துக்கு நியமிக்கப்பட்ட ஒருவர் போற் கருதப்படமாட்டார். அன்றியும் அவ்வித சந்தர்ப்பங்களில் 31Aம் 39Aம் பிரமாணத்தின் நிபந்தனைகள் அவர்களைக் கட்டுப்படுத்த மாட்டா.

3. ஆசிரியரின் பயிற்சிக்காலம் திருப்திகரமாக முடிவு பெற்றதும் அவரை மறுபடியும் ஆசிரியத் தொழிலில் நியமிப்பேனென்று முகாமைக்காரர் ஒரு வாக்குறுதி செய்தல் வேண்டும்.

சுற்றுநிருபம் இல: E 32.
26-10-33

உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளின் முகாமைக்காரர்கட்கு.

உபாத்தியாயர்களின் சம்பளங்களிலிருந்து சில காலத்துக்குப் பணம் பிடிக்கப்படல்.

உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்களின் சம்பளங்களிலிருந்து சில காலத்துக்குப் பணம் பிடிக்கப்படுவதைப்பற்றி 1932 ம் ௵ மார்ச் ீ 22ந் தேதி வெளிட்ட E ீம் இலக்க சுற்றுநிருபத்தைத் தொடர்ந் தறிவிப்பதாவது, 1933ம் ௵ செப்டெம்பர் ீ 6ந் தேதியைக் கொண்ட கவண்மேந்துக் கெசற் பத்திரிகையிற் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகையிற் பிரசுரிக்கப்பட்ட உதவி நன்கொடை பெறும் ஆங்கில பாடசாலைகளுக்கான, உதவி நன்கொடை பெறும் சுவபாஷா இருபாஷா பாடசாலைகளுக்கான, ஒழுங்குச் சட்டங்களின் C ஆம் D ஆம் அநுபந்தங்களின் திருத்தங்களில் முறையே கொடுக்கப்பெற்ற, புதிதாகச் சேவையில் சேரும் ஆசிரியர்களின் சம்பள விகிதங்களிலிருந்தும் சில காலத்துக்குப் பணம் பிடிக்கப் படுமென்க.

சுற்றுநிருபம் இல: E 33.
26-11-33

எல்லா உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளின் முகாமைக்காரர்கட்கு.

உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளில் ஆசிரியர்களாகப் புதிதாகச் சேவையிற் சேருகிறவர்கள்.

புதிதாகச் சேவையிற் சேருகிறவர்கள் சார்பாக, யாவரும் அறிந்துகொள்ளுதற்

பொருட்டு 1933ம் ௵ செப்டெம்பர் ௴ 15ந் தேதியைக்கொண்ட கவண்மேந்துக் கெசற் பத்திரிகையில் பிரசுரிக்கப்பெற்றதும், உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய ஒழுங்குச்சட்டங்களின் பேரில் செய்யப்பெற்றதுமான திருத்தங்கள் வித்தியா சங்கத்தாரால் மேலும் கவனிக்கப்படும். உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளில் ஆசிரியர்களாகப் புதிதாகச் சேவையில் சேருகிறவர்கள் என்பதன் இலக்கணம் முடிவாகத் தீர்மானிக்கப்படும் வரை கீழ்ச் சொல்லப்படும் ஆசிரியர்கள் தவிர மற்றைய ஆசிரியர்கள் யாவரும் புதிதாகச் சேவையில் சேருகிறவர்களாகவே கருதப்படுதல் வேண்டும் —

(1) 1933ம் ௵ ஜூலை ௴ 21ந் தேதி அல்லது அதற்கு முன் வித்தியாதிகாரியால் பதிவு செய்யப்பட்ட ஆசிரியர்கள்.

(2) 1933ம் ௵ ஜூலை ௴ 21ந் தேதி அநுமதிக்கப்பெற்ற அல்லது பதியப்பெற்ற பாடசாலைகளில் சேவையிலிருந்து பதியப்பெறுவதற்குத் தகுதியுடைய வராயிருக்கும் ஆசிரியர்கள்.

எல். மெக்டீ. ரெபிசன்,
பதில் வித்தியாதிகாரி.

---

## Cinematograph.

### சினிமா படக்காட்சி.

(மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள்)

இந்த இருபதாம் நூற்றாண்டில் எல்லோரும் கண்டு இன்புற்றுவரும் நூதன விஷயம் எதுவென்றால், அதுதான் சினிமா படக்காட்சி அல்லது இயங்கும் படக்காட்சியாகும். இந்த அசையும் படக்காட்சி, போட்டோக்ராப் (Photograph) என்னும் புகைப்படம் பிடிக்கும் இயந்திரத்தின் அபிவிருத்தியால் ஏற்பட்ட ஒரு பலனாகும். முன் ஒருகாலத்தில் அதாவது 1839-ம் ஆண்டு வரையில் உருவங்களைப் படம் பிடிக்கும் வித்தை (Photography) முற்ற முடிந்த வித்தையாக இருக்கவில்லை. அக்காலத்தில் ஒரு உருவத்தைப் படம் பிடிக்க ஆறுமணி நேரம் செல்லும். அதாவது ஒரு வீட்டை அல்லது மரத்தை அக்காலத்தில் படம் பிடிக்க ஆறுமணி நேரம் வேண்டியிருந்தது.

அதன் பிறகு அறிவாளிகள் முனைந்து நின்று ஆராய்ச்சி செய்து படம் பிடிக்கும் வித்தையை இன்னும் சுலபமாகச் செய்தனர். அவர்கள் படம் பிடிக்கும் யந்திரத்தில் பலவித மாறுதல்கள் செய்து சொற்ப நேரத்தில் படம் பிடிக்கும் யந்திரங்களை உண்டாக்கினார்கள். இப்போது சில நிமிஷங்களில் ஆயிரக்கணக்கான படங்கள் யந்திரங்களின் உதவியால் செய்யப்படுகின்றன. ஒரு காலத்தில் 6 மணி நேரம் அதாவது 21,000 விநாடிகள் வேண்டியிருந்தது. இப்போதோ ஒரு படம் பிடிக்க ஒரே விநாடி போதுமானது.

இவ்விதம் படம் பிடிக்கும் வித்தை அபிவிருத்தி அடைந்ததன் பலனாகத்தான், நாம் இப்போது கண்டு களிக்கும் சினிமாப் படக்காட்சிகளைக் கண்டு வருகிறோம். சினிமாப் படக்காட்சியில் மனிதர் மிருகங்கள் முதலியவை ஓடியாடியும், கோபம் சந்தோஷம் முதலிய குணங்களை வெளிப்படுத்தியும் இன்னும் பலவிதமாகவும் இயங்குவதை நாம் பார்த்து வருகிறோம். மோட்டார் வண்டிகள் வேகமாகச் செல்வதையும் ஆகாய விமானம் ஆகாயத்தில் பறப்பதையும் நீராவிக் கப்பல்கள் கடல் நீரைக் கிழித்துக் கொண்டு வேகமாகச் செல்வதையும் படக்காட்சியில் நாம் பார்த்து மகிழ்கிறோம். இவைகளை இயங்கும் படங்கள் (Moving Pictures) என்று சொல்லுகிறோம். ஆனால், இப்படங்கள் இயங்குவதுபோல் தோன்றினாலும் உண்மையில் படங்கள் இயங்குகின்றனவா? இல்லை. ஒருபோதும் இயங்கவில்லை. ஆனாலும் அவை இயங்குவதுபோல நமது கண்களுக்குத் தோன்றுகின்றன. இது மிகவும் ஆச்சரியமே. இதைப்பற்றி இங்கு கவனித்துக் காரணத்தை யறியலாம்.

சினிமா காட்சியில் திரையின்மேல் தெரியும் படங்கள், அத்திரையின் எதிர்ப்புறத்திலிருந்து விளக்குவெளிச்சத்தில் காட்டப்படும் படங்களின் சாயல்களாகும். இப்படங்கள், மிகவும் வெளிச்சமுள்ள ஒளியில் காட்டப் படுவதால் அப்படங்களின் உருவம் எதிர்ப் புறத்தில் உள்ள திரையில் நன்றாகவும் தெளிவாகவும் தெரிகிறது. இவ்விதம் காட்டப்படும் படங்களுக்குப் பிலிம் (Film) என்று பெயர். இந்தப் படங்கள், மிகவும் நீளமுள்ள செலுலாய்ட் (celluloid) என்னும் காகிதம்போன்ற பளபளப்பான பொருளில் அமைக்கப்படுகின்றன. இப்பொழுது, அரிச்சந்திரன் கதையை சினிமாப் படத்தில் காட்டப்போவதாக வைத்துக் கொள்வோம். இந்தப் படங்களையெல்லாம் சுமார் 300 அல்லது 400 அடிக்கு மேற்பட்ட நீளமும் ஒரு அங்குல அகலமும் உள்ள செலுலாய்டில் அரிச்சந்திர நாடகத்தைப் படம் பிடித்து அதைச் சுருணையாக வைத்துக் கொள்வார்கள். ஒரு அங்குல அகலமுள்ள இந்த நீண்ட சுருணையைப் பிரித்துப் பார்த்தால் சற்றேறக் குறைய ஒரு அங்குல அகலமும் ஒரு அங்குல நீளமும் உள்ள ஆயிரக்கணக்கான படங்களை அதில் காணலாம். இவ்வளவு சிறிய ஒரு அங்குலம் உள்ள படங்கள்தான், அதிக வெளிச்சமுள்ள ஒளியில் காட்டும்போது திரையில் பெரிய படங்களாகத் தெரிகின்றன.

ஆனால் படங்கள் கைகால்களை அசைத்து இயங்குவதுபோலத் தெரிவதன் காரணம் என்ன? உண்மையில் அவை கைகால்களை அசைக்கவில்லை. படங்களுக்கு உயிர் இருந்தால் அல்லவா கைகால்களை அசைக்க இயலும்? அப்படியிருக்க உயிரற்ற படங்கள் இயங்குவதுபோலத் தோன்றுவதன் காரணம் என்ன?

இயங்குவது போலத் தோன்றும் படங்கள் உண்மையில் இயங்குவன அல்ல. ஒரு மனிதன் நடந்துபோவது போலப் படத்தில் தெரிகிறது. அவன் வலது காலையும் இடது காலையும் தூக்கிவைத்து நடப்பது போலத் தோன்றுகிறது. நாம் பிலிம் என்னும் படக்காட்சிச் சுருணையைப் பார்ப்போமானால், அதில் ஒரு மனிதன் நடந்துபோவதைக் குறிக்க சுமார் 15 படங்களுக்குமேல் இருப்பதைக் காணலாம். அப்படங்களை ஊன்றிக் கவனித்தால் முதலில் அம்மனிதன் தன் வலது காலைச் சற்றுத் தூக்கி நிற்பதுபோலவும் அடுத்த படத்தில் அவன் காலை முழுவதும் தூக்கி நிற்பதுபோலவும் அதற்கடுத்த படத்தில் தூக்கிய காலை சற்று இறக்கி நிற்பதுபோலவும், அதற்கடுத்த படத்தில் அவன் இறக்கிய காலை பூமியில் பதியவைத்திருப்பதுபோலவும் அதற்கடுத்த படத்தில் இடதுகாலைத் தூக்கி நிற்பதுபோலவும், அதற்கடுத்த படத்தில் அக்காலை இன்னும் தூக்கிநிற்பது போலவும் அதற்கடுத்த படத்தில் இடது காலைச் சற்று இறக்கி இருப்பதுபோலவும் அதற்கடுத்த படத்தில் இடதுகாலைப் பூமியில் வைத்திருப்பது போலவும் இவ்வாறே பல படங்கள் காணப்படும். இப்படங்களை இயந்திர மூலமாய் விளக்கு வெளிச்சத்தில் வேகமாகச் சுற்றும்போது அவை திரைச் சீலையில் ஒரு மனிதன் நடப்பதுபோல் காணப்படுகின்றன. ஆனால் அதே படங்களை நிதானமாக அதாவது ஒரு விநாடிக்கு ஒரு படமாகக் காண்பித்தால் அது திரைச் சீலையில் மனிதன் நடந்துபோவது போல் தோன்றாது. ஆனால் மனிதன் காலைத் தூக்கி நிற்பதுபோலத் தோன்றுமே தவிர மனிதன் நடப்பதுபோலத் தெரியாது. இதனால் படங்களை விளக்கு வெளிச்சத்தில் வேகமாகக் காண்பிப்பதற்கும் நிதானமாகக்காண்பிப்பதற்கும் ஏற்றபடி திரையில் காட்சி மாறுபடுகிறது என்று தெரிகிறதல்லவா? ஆகையால், சினிமாப் படங்களைக் குறிப்பிட்ட ஒரு வேகத்தோடு விளக்கு வெளிச்சத்தில் இயக்கினால் அவை அசைவதுபோலத் தோன்றும் என்பது விளங்குகிறது. அதாவது ஒரு விநாடியில் 30 படங்கள் காண்பிக்கப் படவேண்டும் என்று ஏற்பாடு செய்திருப்பதாகத் தெரிகிறது. ஏனென்றால் ஒரு விநாடியில் 30 படம் காட்டக்கூடிய அவ்வளவு விரைவாகப் படச் சுருணையைச் சுற்றினால்தான் அப்படங்கள் நமது கண்ணுக்கு இயங்குவதுபோல் தோன்றும். அந்த வேகத்திற்குக் குறைவாகப் படங்களைக்

காண்பித்தால் அவை இயங்குவதுபோலத் தோன்றாமல், லண்டன் காட்சியில் படம் நிற்பதுபோலத்தான் தோன்றும். இவ்வளவு வேகமாக மனிதரால் படங்களைக் காட்டமுடியாததாகையால் இயந்திரங்களின் உதவியால் இப்படங்களைக் காட்டப் படுகின்றன. இதனால் படங்கள் இயங்குவதுபோல் காண்கிறோம். ஆனால் உண்மையில் படங்கள் இயங்குகின்றனவல்ல. அதன் வேகம் அது இயங்குவதுபோல் நம்மை நம்பச் செய்கிறது.

கதைகளை எப்படிப் படம் பிடிக்கப் படுகின்றது? ஒரு கம்பெனியார் ஒரு கதையைப் படம் பிடிக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். முதலில் கதையை நடிகர்களுக்குச் சொல்லி இன்னின்ன பாகங்களை இன்னின்னார் நடிக்க வேண்டும் என்று தலைவர் சொல்லுவார். அதன் பிறகு அவரவர்கள் பாகங்களை அவரவர்கள் நடித்துக் காட்டுவார்கள். இந்த "ஒத்திகையில்" எல்லோரும் சரியாக நடிக்கிறார்களா என்று தலைவர் கவனிப்பார். இல்லையானால் இவ்விதம் நடிக்க வேண்டும் என்று அவர்களுக்குக் கற்றுக் கொடுப்பார். பிறகு சரியாக நடிக்கிறார்கள் என்று தெரிந்தவுடன் படம் பிடிக்கும் பெட்டியைக் கொண்டு படம் பிடிக்க உத்தரவளிப்பார். அந்தப்பெட்டிக்குள் ஒரு நீண்ட சுருளை செலுலாயிட் சுற்றிவைக்கப்பட்டிருக்கும். படம் பிடிப்பவர் ஒரு கைப்பிடியைப் பிடித்துச் சுற்றிக்கொண்டேயிருப்பார். அப்போது நடிகர்களின் படம் அந்தச் சுருளையில் பதிந்துவிடும். இந்தப் படம் பிடிப்பவர் மிகவும் தேர்ந்த சாமர்த்தியசாலியாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் படங்களை நன்றாய்ப் படம்பிடிக்க இயலும். பிறகு இந்தப் படத்தை இருட்டறைக்குக் கொண்டு போய் வெளியே எடுத்து பக்குவம் செய்வார்கள். சரியானபடி பக்குவம் செய்தானவுடன் முதலாளி அல்லது தலைவரிடம் அவை அனுப்பப்படும். அங்கு அப்படங்களை அவர் ஒழுங்கு செய்வார்; அதாவது நீக்கவேண்டிய பாகங்களை நீக்கி, சேர்க்கவேண்டியதைச் சேர்த்துக் குறிப்புக்கள் எழுதவேண்டியதை எழுதிச் சேர்த்து கதை தொடர்ச்சியாக இருக்கிறதா என்பதைக் கவனித்துச் சீர்படுத்துவார். இப்படிச் செய்து கதையை முடிப்பது சுலபமான காரியமல்ல. கடைசியாக அப்படம் குணதோஷம் (criticism) கண்டுபிடிக்கப் படுவதற்காகத் திரையில் காட்டப்படும். படம் சரியானதென்று தோன்றினால் அதைப்போல் பல சுருளை படங்கள் பிடிக்கப்பட்டு உலக முழுவதிலுமுள்ள சினிமா காட்சிசாலைகளுக்கு அனுப்பப்படுகிறது.

இவ்விதம் சினிமா படங்களை உற்பத்தி செய்பவர்களிடம் ஏராளமான நடிகர்களும் குதிரை நாய் பூனை முதலிய பிராணிகளும் பட்சிகளும் ஆயிரக் கணக்கான உடுப்புகளும் சாமான்களும் இருக்கும். இவையாவும் லக்ஷக் கணக்கான விலையுள்ளவை. சில சமயங்களில் ஒரு கண்டத்திலிருந்து இன்னொரு கண்டத்திற்குச் சென்று காட்சிகளைப் படம் பிடிக்கவும் வேண்டியிருக்கும். இவைகளுக்கெல்லாம் லக்ஷக்கணக்கான ரூபாய் செலவாகிறது. அப்படிச் செலவு செய்தும் அவர்கள் அதிக லாபத்தை அடைந்து வருகிறார்கள்.

இப்போது மேல்நாடுகளில் சினிமா படக் காட்சிகளின் மூலமாய் பிள்ளைகளின் பாடசம்பந்தமான விஷயங்களைப் போதித்து வருகிறார்கள்.

சினிமாக் காட்சியில் அபாயகரமான காட்சிகளைக் காண்பிக்கிறார்களே! அவைகளை மனிதர் உண்மையாகவே நடிக்கிறார்களா என்று சிலர் அதிசயப்படக்கூடும். சினிமா படம் பிடிப்பதில் அநேகவித தந்திரங்கள் உண்டு. அவைகளை அவர்கள் வெளியில் சொல்லாமல் மிகவும் இரகசியமாக வைத்திருக்கிறார்கள். ஒரு மனிதன் மோட்டார் வண்டியில் அகப்பட்டுக் கொள்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அவ்வாறே படத்திலும் காட்டப்படுகிறது. நாம் அதைக்கண்டு உண்மையாகவே அகப்பட்டுக் கொண்டான் என்று நினைத்து மனம் துடிக்கிறோம். ஆனால் உண்மையில், நடிக்கும் மனிதன் அகப்பட்டுக் கொள்ளவில்லை. நடிகனைப்போல ஓர் உருவம் செய்து அதன் மேல் வண்டியை ஓட்டுகிறார்கள். வண்டி

ஏறிய பிறகு உண்மையான நடிகன் தன் மேல் வண்டி ஏறிவிட்டதுபோல் துடித்து கதிக்கிறான். இவ்வித மாகத்தான் அனேக தந்திரங்கள் உண்டு. ஆனால் அவை உண்மை என்று நம்பும்படி அவ்வளவு திறமையாகவும் புத்திசாலித் தனமாகவும் அமைக்கப்பட்டுப் படம் பிடிக்கப்படுகின்றன.

(ஆரம்பாசிரியன்.)

## Appointments and Transfers in Government Tamil Schools during the Month of October 1933.

### 1933-ம் ஞு ஒக்டோபர் மாசத்தில் அரசினர் தமிழ்ப்பாடசாலைகளில் ஆசிரியரின் நியமனமும் மாற்றமும்.

| பெயர். | முன்னிருந்த பாடசாலை. | தற்போதிருக்கும் பாடசாலை. |
|---|---|---|
| M. M. சம்சுமன் | உ. ஆ. NG. கல்ஒலுவ | உ. ஆ. KL. வெளிப்பென்னை |
| C. கந்தையா | ——— | உ. ஆ. KL. சினன்கோட்டை |

## Vacancies in Government Schools.

### அரசினர் தமிழ்ப் பாடசாலைகளிலுள்ள காலியான இடங்கள்.

**ஆண்கள்.**

தலைமை ஆசிரியர்

P. காரைதீவு
*A. முத்துகல

**ஆண்கள்.**

உதவி ஆசிரியர்

K. அக்குறணை
P. கண்டல்குளி
KL. கெனமுல்லை.

**பெண்கள்.**

உதவி ஆசிரியர்

NG. உணுப்பிட்டி
BT. கோயில்போறதீவு
K. லேடி. கோடன்
*A. முத்துகல.

* புருஷனும் மனைவியும் ஆசிரியர்களாயிருப்பவர்களே இவ்வடையாள மிடப்பட்ட காலியான இடங்கட்கு விண்ணப்பஞ் செய்தல் வேண்டும். தமிழில் இருவரும் தகைமையுடையவர்களாயிருத்தல் வேண்டும். அத்துடன் ஆசிரியர் ஆங்கிலம் தெரிந்தவராயும் இருத்தல்வேண்டும்.

விண்ணப்பங்கள் அவ்வப்பகுதிக்குரிய பெரும்பாக வித்தியாதரிசிகளுக்கு 31-12-33க்குமுன் அனுப்பப்பட வேண்டும்.

# ST. GERARD'S PRESS,

ART AND COMMERCIAL PRINTERS,

MALIBAN STREET, COLOMBO.

*ESTABLISHED 1915.*

**Printers to:—THE LEADING COLLEGES AND SCHOOLS IN THE ISLAND.**

***UNBEATABLE FOR SPEED, ECONOMY AND EXCELLENCE.***

**We Specialise in**

SCHOOL CHART BOOKS.
REPORT BOOKS.
MAGAZINES, DRAWING
AND EXERCISE BOOKS
SPORT PROGRAMMES.
CONCERT PROGRAMMES
TICKETS, ETC., ETC.

***A WORD TO ESTATE SUPERINTENDENTS.***

PLEASE CONSULT US ON YOUR NEXT ORDER FOR PRINTING. YOU WILL SEE THAT YOU

***- - GET - -***

MAXIMUM PROFIT

AT

MINIMUM COST.

***TELEPHONE 806.***